# தொண்டன்

1988

★

மாசி



கிறீத்தவ இலக்கியத் திங்களேடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

மாசி — 1988
மலர்: 20 இதழ்: 01

★

ஆசிரியர் :
சி. பி. இராஜேந்திரம்

இணை ஆசிரியர் :
மலர்வேந்தன்

ஆசிரியர் குழு :
பீ. ஜோசப்
ஏ. ஜி. இராஜேந்திரம்

வெளியீடு :
சமூகத் தொடர்புகள் நிலையம்,
திரி./மட். மறை மாவட்டம்

தொடர்பு :
சமூகத் தொடர்புகள் நிலையம்,
ஆயரகம்,
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS CENTRE
BISHOP's HOUSE,
BATTICALOA.

விலை :
தனிப்பிரதி ரூபா 4/50
ஆண்டுச் சந்தா ரூபா 50/-

## உள்ளே....

1. இதயத்திலிருந்து — 1
2. சுவைக்கச் சில துளிகள் — 2
3. மனமாற்றமும்... — 3
4. நீதிதேவன் காக்க... — 4
5. சாக்கடல் — 6
6. தணியாத தாகம் — 7
7. இரும்பு இதயங்களும்... — 9
8. இளைஞர் அரங்கம் — 10
9. கிறித்தவத் தமிழ்... — 13
10. என் மகன் வளராமல்... — 16
11. சிறுகதை — 17
12. கத்தோலிக்க திருச்... — 20
13. சிங்காரத்தோப்பில்.. — 23
14. பாதரட்சை பேசினால் — 25
15. குறுக்கெழுத்துப் போட்டி — 27

**எழுதுங்கள் !**

கிறித்தவ — சமூகச் சிந்தனைகளைக்கொண்ட ஆக்கங்களை தொண்டன் எதிர்பார்க்கின்றான்.

புதிய சிந்தனைகளுக்கு — புதிய ஆக்க முயற்சிகளுக்குக் களம் அமைத்துக் கொடுக்கத் தொண்டன் காத்திருக்கிறான்.

எழுதுங்கள்! ஏற்றவையாயின் பிரசுரிப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத்திலிருந்து....

யூத மக்களிடையே பழங்காலத்தில் மக்கள் தங்கள் ஆற்றொண்ணாத் துயரத்தை தங்கள் உடம்பிலே சாம்பல் பூசி வெளிப்படுத்தினர். பழைய ஆகமத்திலே யூத மக்கள் பாவத்தை விட்டு கடவுளிடம் திரும்ப சாம்பல் பூசிக் கோணி உடுத்தி தவமிருந்தனர். விபூதித் திருநாளில் ''மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள்'' என்று அல்லது ''மண்ணாயிருக்கிறாய் மண்ணுக்குத் திரும்புவாய் என்று நினைத்துக்கொள்'' என்று குரு நெற்றியிலே சாம்பல் பூசுகின்றார். சாம்பலிலே புதுவாழ்வு மலரட்டும் என்று தவக்காலம் துவங்குகின்றது.

விபூதித் தினத்தன்று நாம் பூசும் சாம்பல் கடந்த வருடத்தில் குருத்தோலை ஞாயிறன்று கிறிஸ்துவை வரவேற்க நாம் ஏந்திய குருத்துக்கள் காய்ந்து எரிந்து ஆகிய சாம்பல். கிறிஸ்துவை வரவேற்ற நெஞ்சங்கள் அவரை வாழவிடவில்லையே என்று வருந்தி எரிந்த சாம்பல் திரும்பவும் கிறீஸ்துவை வரவேற்கத் திறக்க வேண்டுமெங்கள் நெஞ்சங்கள் என்று நாம் பூசும் சாம்பல் — தவக்காலத்தின் துவக்கம்.

தமிழ் மக்கள் பலரிடமும் இன்று எஞ்சியிருப்பது ஒருபிடிச் சாம்பல்தான். இறந்தொழிந்து, எரிந்தொழிந்து, அழிந்தொழிந்து எஞ்சியிருப்பது — இந்தச் சாம்பலில் மலரவேண்டும் புதுவாழ்வு. கிறிஸ்துவின் உயிர்ப்பிலே எங்கள் உள்ளத்தில் மலரவேண்டும் வாழ்வின் மேல் நம்பிக்கை.

— சி. பி. இராஜேந்திரம்

---




ஒவ்வொருவரும்
தன் தீயவழியை விட்டுத்
திரும்பட்டும்.

யோனா 3/8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவைக்கச் சில துளிகள்

## அழியாத நூல்

ரஷ்ய நாட்டின் தலைமை அரசியலகம் கிரெம்ளின் மாளிகையின் அடியில் உலோகத்தாலான நிலவறை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது அதில் உலகப் பேரறிஞர்களினுல் எழுதப்பட்ட நூல்கள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. மீண்டும் ஓர் உலகப் போர் ஏற்பட்டு உலகம் அழிந்தாலும் அந்நூல்கள் அழியாவண்ணம் அமைந்துள்ளது அந்நூல்களில் திருக்குறளும் உண்டு.

## முதலில் அமைதி

பூசல் என்று வந்தால் மக்கள் பழிவாங்க நினைப்பதே இயற்கை ஆனுல் பழிவாங்குவதால் பூசல்கள் தீர்ந்துவிடுவதில்லை. அமைதியை நிலைநாட்டப் பாடுபடுவதே நமது முதற்கடமை. இரண்டு சகோதரர்கள் சண்டையிடும்போது அவரையோ, இவரையோ குறை சொல்வதில் நாம் பொழுதைக் கழிக்கலாகாது. சண்டையை நிறுத்துவதில்தான் முனையவேண்டும்.

— இந்திராகாந்தி.

அன்னை இப்படி மகன்?!

## எந்த ஸ்ரைல்

மனைவி: ஏங்க கத்தி, வாள், அரிவாள், கோடரி, துவக்கு எல்லாம் எடுக்கிறீங்க. எங்க போகப்போறீங்க?

கணவன்: அடுத்த வீட்டில குடும்பச் சண்டை அதைச் சமாதானம் செய்துவைக்கப் போறன்.

மனைவி: ஓகோ! அந்த ஸ்ரையிலிலா?

நன்றி: 'நிழல்'- கனடா.

## அது இல்லா விட்டால் இது இல்லை

புனித பத்தாம் பத்திநாதர் ஆயராகத் திருநிலைப் படுத்தப்பட்ட பின்பு அவருடைய அன்னையைக் காணச் சென்ருர். தன்னுடைய மோதிரத்தை பெருமையாக அம்மாவிடம் காண்பித்தார். அந்த மூதாட்டி சிறு புன்னகையுடன் அந்த மோதிரத்தை முத்தி செய்து விட்டு தன்னுடை சிறு மோதிரத்தை ஆயரிடம் காண்பித்துக் கூறினுர்.

''உம்முடைய மோதிரம் அழகாகத்தான் இருக்கிறது. ஆனுல் இந்த மோதிரததை நான் அணிந்திரா விட்டால் அந்த மோதிரத்தை நீர் அணிந்திருக்க முடியாது.



# மனமாற்றமும் சமாதானமும்

சகோ. தேவா யே. ச.

மனமாற்றம் என்பது மயக்கத்தைத் தோற்றுவிக்கின்றது மனதை மாற்றுவதா? மனதில் உள்ளதை மாற்றுவதா? இது சாதிக்கக்கூடிய சாதனைக்குரிய காரியமா? என்றெல்லாம் எண்ணத்தான் தோன்றுகிறது. மனமானது ஒவ்வொரு கணப் பொழுதும், இமைப் பொழுதும் நாம் அறிகிறோமோ அறியவில்லையோ, மாறிக்கொண்டே இருக்கிறது. மனம்தானே மாறிக்கொண்டே இருக்கிறது. இதில் என்ன சாதனை இருக்கிறது? மாறிக்கொண்டே இருக்கும் மனத்திடம் போய் ''மாறு மனமே, மாறுமனமே'' என்று பல்லவி பாடக் கிறுக்கா பிடித்திருக்கிறது? இப்படியெல்லாம் மனத்திடையே கேள்விகள் அரும்பாமல் இல்லை.

நாம் அறிந்து தெளிந்து நமது மனம் இந்தப் பாதையிலே இப்படித்தான் போக வேண்டுமென்று நாம் அமைக்கும் வழியிலே தவழ்ந்து நடை பயில வைப்பதுதான் சாதனை. இதுதான் அனைத்துச் சாதனைகளுக்கும் மூலாதாரமாக அமைவது. சாதனைகள் பல படைக்கும் இன்றைய இளைஞனிடமும் இளம் யுவதியிடமும் இருந்து எதிர்பார்க்கப்படும் முக்கியமான சாதனை இதுதான்.

மனமானது நன்மையை நோக்கித் திசை மாறலாம். தீமையை நோக்கித் திசை மாறலாம். ஆக்கத்திற்காக மாறலாம். அழிவிற்காக மாறலாம். ஆக்கமும் அழிவும், நன்மையும் தீமையும் மாறி மாறி இந்த மனத்திடையே அடம்பிடித்து இடம்பிடிக்கிறது. மனம்போன போக்கிலே மனிதன் போகிறான். மனம் போன பாதையில வாழ்க்கை இல்லிடம் அமைத்த போதிலும், ஏதோ ஒரு வழியில், ஏதோ ஒரு காலகட்டத்தில், தமது கடந்தகால வாழ்க்கையை ஒவ்வொரு மனமும் சீர்தூக்கிப் பார்க்காமல் இல்லை.

தனிப்பட்ட முறையிலே நாம் வளர்ந்து இருக்கிறோமா? என்று ஆராய்ச்சி நடத்துகிறது இந்த மனம். வளர்ந்திருந்தால் புகழாரம் வழங்குகிறது. தேய்ந்து இருப்பதாகத் தென்பட்டால் வருத்தம் கொடுக்கிறது. எதிர்வரும் காலங்களிலே பழைய மனப் போக்கை மாற்ற, மனம்மாற முடிவு எடுக்கிறது. தன்னைப் பற்றிச் சீர்தூக்கிப்பார்ப்பதோடு நின்றுவிடாமல் உற்றார் உறவினரையும் சுற்றத்தாரையும் தன்னுடன் சேர்த்துப் பார்க்கிறது. கடந்த காலங்களில் மற்றவருக்கும் தனக்கும் இடையே உள்ள உறவு வலுவடைந்து இருக்கிறதா? வலுவற்று உறவு துண்டிக்கப்பட்டு இருக்கிறதா? என்பதைப் பகுத்தாய்ந்த மனம் அதற்குரிய காரண காரியங்களை அலசிப்பார்த்து தன்னை மாற்ற முடிவு எடுக்கிறது. மனமாற்றம் மனிதனுக்குள் அமைந்திருக்கும் மகத்துவம்.

தவக்காலத்திலே திருச்சபையானது விசேச முறையிலே மனமாற்றத்தையும் அதன் அவசியத்தையும் எமக்கு எடுத்துக் கூறுகிறது. தவக்காலத்து மனமாற்றம் என்பது உயர்ந்த நோக்குடையது. புனிதமானது. தவமிருந்து அதாவது தனித்திருந்து, விழித்திருந்து, பசித்திருந்து மனத்திடை மாசுகள் நீக்கி தூயவனோடு தூய்மை பெறுவது. ''பாவமன்னிப்பு அடைய மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறுங்கள்'' (லூக் 2 : 3). என்று ஸ்நாபக அருளப்பர் யோர்தான் ஆற்றை அடுத்த நாடெல்லாம் சுற்றி அறிவித்தார். இதைத்தான் இன்று திருச்சபையானது மனந்திரும்பி நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து இறைவனோடு ஒப்புரவாகுங்கள் என்று தவக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் விசேச முறையில் அறைகூவுகிறது.

''கடவுளின் அரசு இதோ! உங்களிடையே உள்ளது'' (லூக் 17:21) மனந்திரும்பிக் கடவுளின் அரசைக் கட்டி எழுப்புவதில் என்னோடு சேருங்கள் என்று இறைமகன் இயேசு நம் ஒவ்வொருவருக்கும் அழைப்பு விடுக்கிறார். இந்த இறை அரசைக் கட்டி எழுப்புபவர்களுக்குத் தேவையான பண்புகளாக இருப்பன அன்பு, நீதி, சமாதானம், சமகாலச் சூழ்நிலையிலே தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்கும் மிகவும் அவசியமாகத் தேவைப்படுவது சமாதானமே. புறச் சூழ்நிலைகள், அக அமைவுகள் சமாதானத்தைத் தோற்றுவிக்கும் இரு சாதனங்கள். புறச் சூழ்நிலைகள் என்னும்பொழுது பொருள், இடம் வினை-தன்னால் ஏற்பட்ட வினை, பிறரால் ஏற்பட்ட வினை போன்றவற்றைக் குறிக்கின்றது. அக அமைவு என்பது எதற்கும் அலட்டிக்கொள்ளாத பதட்டமற்ற தெளிந்த உள்ளார்ந்த மனநிலை. புறச் சூழ்நிலைகளினால் கிடைக்கும் சமாதானத்தையும் ஒப்பிட்டு மதிப்பீடு செய்யும்பொழுது, புறத்தினால் வருவது மாறும் மதிப்பீடுடையது என்றும் அகத்தினால் வருவது மாறாத மதிப்பீடுடையது என்றும் துணிந்து சொல்ல முடியும்.

பழைய ஏற்பாட்டிலே, யார்யார் அதிகளவில் ஆடு மாடுகளையும் கழுதைகளையும் அடிமைகளையும் வைத்திருந்தார்களோ அவர்களெல்லோரும் சமாதானமாக இருந்தார்கள் என்பது யூதர்களின் கணிப்பு. எங்கெல்லாம் குண்டு

> உள்ளத்தில் பள்ளம் ஏற்படும் போதுதான் மனிதர்களின் வாழ்க்கையில் பள்ளம் ஏற்படுகிறது.

வெடிப்புக்களும் போர் முழக்கங்களும் ஆக்கிரமிப்புக்களும் தலைவிரித்துத் தாண்டவம் ஆடுகின்றனவோ, அங்கெல்லாம் சமாதானம் மயானத்தைச் சுற்றி வட்டமிடுகிறது என்பது தற்கால நடைமுறையில் நாம் அனுபவ ரீதியாக உணரும் உண்மை. இவ்விரு நிகழ்வுகளும் புறச்சூழல்களால் சமாதானம் உருவாகலாம், சீர்குலையலாம் என்பதை உறுதிப்படுத்துகின்றன. ஆனால் இதனால் கிடைக்கும் சமாதானம் தற்காலிகமான மாறுந்தன்மையுள்ள சமாதானம் என்பது உறுதி.

நிரந்தரமான மாறாத்தன்மையுள்ள சமாதானத்தைப் பெற மனம் மாறுங்கள் என்று கிறிஸ்து பெருமான் தனது வாழ்க்கையின் மூலம் வாழ்ந்து காட்டியதை நாம் தவக்காலத்திலே சிந்திக்கத் துணிவோம். அமைதியை அவனிக்கு அருள வந்த ஆண்டவனின் வாழ்வின் புறச் சூழ்நிலைகள் துன்பமாகவே இருந்தன. காட்டிக் கொடுப்பவர்கள், மறுதலித்துப் பேசுபவர்கள், ஆக்கினை கொடுப்பவர்கள், உயிரையே நாசப்படுத்துபவர்கள் என்று நாம் இன்று யார் யாரையெல்லாம் காண்கிறோமோ அவர்களெல்லோரும் அன்றும் இருந்தார்கள்.

இயேசுவைக் காட்டிக் கொடுத்தவன் அன்னியனல்ல. மற்ற இயக்கத்தைச் சார்ந்தவனும் அல்ல. இயேசுவின் இயக்கத்தையே சேர்ந்தவன். ''அந்த ஆளை எனக்குத் தெரியவே தெரியாது'' என்று மறுதலித்தவரும் இயேசுவின் இயக்கத்தைச் சார்ந்தவரே. ஆக்கினை பல கொடுத்த தம் சொந்த இனத்தவரே ''இவனைச் சிலுவையில் அறையும்'' என்று அன்னியரிடம் கையளித்தபோது... எப்படி இருக்கிறது சூழ்நிலை...?

இக்கட்டான உயிர்பிரியும் சூழ்நிலையிலும் புறத்தைப் புறம்பாகவே வைக்கிறார் கிறிஸ்து. புறத்தது அகத்தைப் பாதிக்க அவர் விடவில்லை. உள்ளத்தால் ஆண்டவனோடு இரண்டறக் கலந்திருந்தார் அவர். இதனால் அகத்திலே நிரந்தர அமைதியும் சாந்தியும் சமாதானமும் குடிகொண்டிருந்தது அவருக்கு. எனவேதான் தன்னைத் துன்புறுத்தியவர்களுக்காக இறைவனைப்பார்த்து ''ஆண்டவரே, இவர்கள் செய்வது என்னவென்று அறியாமற் செய்கிறார்கள். இவர்களை மன்னியும்'' என்று தன் உயிரின் கடைசி மூச்சை வாங்கிக்கொண்டிருந்தவர்களுக்குச் சமாதானம் தேட முடிந்தது.

உச்சிமீது வானிடிந்து விழுகின்ற அளவிற்குப் புறச் சூழல்கள் பாதிக்கின்ற போதிலும் மனம்மாறி ஆண்டவனோடு நெருங்கிவாழ, அகச் சமாதானத்தை இறைவன் கொடுக்க, இறை அரசைக் கட்டி எழுப்பும் பணியில் தவக்காலத்திலே விசேச விதமாகப் பங்குகொள்ள இறைவனை வேண்டுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிதேவன் காக்க வேண்டும்!

★

சண்டையெனும் பேய்தன்னை ஒழிக்க வேண்டும்
சமாதானம் எனுங்கீதம் ஒலிக்க வேண்டும்!
மண்ணெங்கும் அன்பொன்றே வளர வேண்டும்
மனதெங்கும் மகிழ்ச்சிப்பூ மலர வேண்டும்!
விண்முட்டும் அளவிற்கே ஒற்று மையே
விளையவேண்டும்; வேற்றுமையைக் களையவேண்டும்!

❋

நேசத்தால் தேசத்தை ஆள வேண்டும்
நெஞ்சத்தை நேர்மைநீர் சூழ வேண்டும்!
வேசத்தை உளமிருந்து விரட்ட வேண்டும்
வெள்ளமென ஒற்றுமையை திரட்ட வேண்டும்!
பாசத்தைப் பண்புதனைப் பொழிய வேண்டும்
பாரெங்கும் சமாதானம் மலிய வேண்டும்!

❋

சத்தியத்தை இத்தரையில் விதைக்க வேண்டும்
சமர்தன்னைச் சாம்பலாக்கி புதைக்க வேண்டும்!
எத்திசையும் ஒற்றுமையே ஓங்க வேண்டும்
இனியெல்லாச் சச்சரவும் நீங்க வேண்டும்!
நித்தமுமே சமாதானம் பூக்க வேண்டும்
நிலமிதனை நீதிதேவன் காக்க வேண்டும்!

— எம். எல். எம். அன்சார் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தெரிந்து கொள்ளுங்கள்

# சாக்கடல்

உலக அதிசயங்களில் சாக்கடலும் ஒன்று. சாக்கடல் விவிலியத்தில் உப்புக்கடல் என்று அழைக்கப்படுகிறது. லோத்தின்கடல் என்று இதனை அழைக்கின்றனர் அராபியர். இதன் நீளம் 47மைல். அகலம் 9½மைல். கடல் மட்டத்திற்கு 1300அடி கீழ் அமைந்திருக்கிறது. சாக்கடலில் புல், பூண்டு எதுவுமே வளராது. ஜீவராசிகள் எதுவும் வாழாது. யோர்தான் நதியிலிருந்து வந்து விழும் மீன்கள் வினாடியில் இறந்துவிடுகின்றன. காரணம் கடலில் உள்ள ஏராளமான உப்பும், உலோகப் பொருள்களும்தான். கடல் நீரைப் பார்த்தால் இது தெளிவாகத் தோன்றும். நீரில் கையைவிட்டால் வழவழவென்று எண்ணெயில் கையை விட்டது போல் இருக்கும். கையை வெளியே எடுத்து சூரிய வெளிச்சத்தில் வைத்தால் சிறிது நேரத்தில் உப்புப்படிகம் கையில் படிந்திருக்கும். கடல் நீரில் இறங்கினால் மூழ்க முடியாது. மிதக்கலாம். நீர் கண்ணில் பட்டால் எரிச்சல் எடுக்கும்.

சாக்கடலை ஆய்வு செய்த அறிஞர்கள் பின்வரும் தகவல்களை வெளியிட்டுள்ளனர். சாக்கடலில் ஒருலீட்டர் தண்ணீரில் 275கிராம் உப்பு உண்டு. மற்றைய கடல் நீரில் லீட்டருக்கு 35கிராம் அளவே உப்பு உண்டு.

சாக்கடலில் 200 கோடி மெட்ரிக்டன் பொட்டாசியம் குளோரைட் 98கோடி மெட்ரிக்டன் மெகனீசியம் ப்ரோமைட், 1100கோடி மெட்ரிக்டன் சோடியம் குளோரைட், 2200 கோடி மெட்றிக்டன் மெக்னீசியம் குளோரைட், 600கோடி மெட்ரிக்டன் சல்சியம் குளோரைட் ஆகியவை இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

யோர்தான் நதியிலிருந்து தினமும் சாக்கடலில் விழும் நீரின் அளவு 1160கோடிகலன். இதுதவிர வேறு பாய்ச்சல்களிலிருந்து விழும் நீரின் அளவு 220கோடி கலன். மழைக் காலத்தில் இன்னும் அதிகநீர் கொட்டும். இவ்வளவு நீர் வந்து சேர்ந்தும் சாக்கடலின் நீர்மட்டம் ஏறக்குறைய ஒரே அளவுதான் இருக்கும். நீர் வெளியே வழிந்து போவதே கிடையாது. வெப்பத்தினால் ஆவியாகப் போவது மட்டுந்தான். சாக்கடலின் உலோக இருப்பு வருடாவருடம் அதிகமாகிக் கொண்டே போகிறது.

இச்சாக்கடல் சுமார் 50 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டிருக்கலாம் என்று மண்ணூல் அறிஞர் கூறுகின்றனர்.

அஞ்சாதே! காரணம், அஞ்சுபவன் உள்ளத்தில் உண்மையான அமைதியும், ஆனந்தமும் இருப்பதில்லை.

அன்பில்லாத இடத்தில் விசுவாசமிருக்காது. விசுவாசமில்லாத இடத்தில் அன்பிருக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரைத்தான் வாழவிட்டார்கள் மனிதர்கள். எத்தனை உத்தமர்களை, சமூகத் தொண்டர்களை, சமயப போதகர்களை, சமூக வழிகாட்டிகளை இந்த உலகமாதா இம்மண்ணிலே பெற்றெடுத்தாள்! ஆனால் மனிதன் அவர்களை வாழவிட்டானா?

இயேசுக்கிறீஸ்துவுக்கு — சிலுவை
முகமது நபிக்கு - கல்லெறி
சோக்கிறற்றீசுக்கு — விஷம்
மகாத்மாகாந்திக்கு — துப்பாக்கிச்சூடு

இவ்வாறு சிலுவையும், வாளும், கத்தியும், காடும், சிறையும், நாடு கடத்தலும், பரிசாகப் பெற்ற உத்தமர்கள் எத்தனை எத்தனையோ

உலகம் கெட்டவர்களோடு சேர்ந்து நல்லவர்களைப் பழிக்கிறது. கெட்டவர்களை மதிக்கிறது.



# தணியாத தாகம்

இவ்வுலகம் மனிதனை அவனது வாழ்நாளில் போற்ற முன்வராது அவனுக்கு உற்சாகமொழியோ, ஆறுதல் மொழியோ, ஊட்ட முன்வராது. இறந்தபின்புதான் அவனுக்குச் சிலை அமைத்து, ஊர்வலம் நடாத்தி, மாலைபோட்டு, நினைவு மண்டபமெழுப்பி, அஞ்சலிசெலுத்தி, தங்கள் பொய்மையான, பகட்டான உறவையும், அன்பையும் எடுத்துக்காட்டும்.

இறைவன் ஒரு அன்புக்கடல். அதில் நீந்தித் திளைக்கப் படைக்கப்பட்ட மீன்கள்தான் மனிதர்கள். கடலில் வாழும் மீன்கள் பலவாருக இருக்கலாம், பல்சுவையாகத் திகழலாம், ஆனல் அனைத்தும் கடல் மீன்களே. அது போலவே மனிதன் பற்பல வடிவங்கொண்டவனக, பலமொழி பேசுபவனக, பல்தொழில் புரிபவனக இருக்கலாம். மனிதரெல்லாம் வாழும் மனிதர்களே. கல்லறைத் தோட்டத்திலே, கண்டெடுத்த எலும்புகளைக் கொண்டு, இறந்தவன் எந்த விட்டான், எனன சாதி, என்ன மதம், என்னமொழி பேசுபவன் என்று யாரால் கூறமுடியும்.

மனிதர்களில் பலர் அறிவில் வளர்ந்திருக்கலாம், பணம், பதவி, பட்டம், அழகு, ஆடம்பரம் அனைத்திலும் சிறந்திருக்கலாம். ஆனல் அன்பும், பண்பும் அவனிடத்தில் இல்லையேல் அவனை மனிதன் என்று அழைக்கலாமா? தவழ்ந்து வரும் தென்றல், மனிதனை ஒதுக்கிவைப்பதில்லை. தண்ணொளி சிந்தும் வெண்ணிலா மனிதனைப் பகைப்பதில்லை. பறவைகளும், பலவித விலங்கினங்களும், மனிதனேடு உறவாடி மகிழ்ந்து வாழ்கின்றன. மரம், செடி, கொடி போன்றவை மனிதனுக்குப் பலவிதத்தில் உபயோகப்படுகின்றன. ஆனல் ஏனே மனிதன் மட்டும் உலகிற்கும், சமூகத்துக்கும் கொடுமை புரிபவனய் வாழ்ந்திடலாமா? இன்றைய உலகில் மனிதன் மனிதனேடு வாழ முடியவில்லையே?

மனிதனைப் படைத்த இறைவன், அவன் இதயத்தைப் பிறர் பார்க்கும், அளவுக்குப் படைக்கவில்லை. பிறர் பார்க்கும் அளவுககு மனித இதயத்தை கடவுள் படைத்திருந்தால இந்த உலகம் ஒரு நிமிடம்கூட வழவிடாது. காரணம், மனித இதயத்தில் நிறைந்திருப்பதெல்லாம் பகை, வர்மம், பழிச்சொல், கொடூரம், பேராசை, ஏமாற்று, காமம், பொய், களவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை போன்றவற்றையே காணலாம் மிக இதயத்தைப் பார்க்காமலேயே இந்த உலகம் இப்படி அல்லோலகல்லோலப் படுகிறதென்றால், ஒருவர் இன்னொருவர் இதயத்தைப் பார்த்து விட்டால், என்னவாகும் இந்த உலகம்! சிந்தித்துப் பார்க்கவே முடியவில்லை.

ஒரு மனிதனுக்குள்ள ஆசையும், ஆவலுந் தான் ஏனைய மனிதருக்குமுள்ளது. தன்னைப் போல்தான், அடுத்த மனிதனுக்கும் உள்ளம், உடல், ஆன்மா உண்டென ஒவ்வொருவரும் உண வேண்டும். தனக்கு மற்றவர் என்ன செய்ய வேண்டும் என்ன செய்யக்கூடாது என நினைக்கின்றானோ அதுபோலவே தானும் மற்றவர்களைப் புரிந்து கொண்டு, வாழத் தெரிந்து கொள்ள வேண்டும். ''தன்னைத் தான் நேசிப்பது போல, உன் பிறனையும் நேசிப்பாயாக'' இது இயேசுக்கிறீஸ்துவின் அருள்மொழி. இதை யார் இன்று கடைப்பிடிக்கிறார்கள்?

''மனித இதயங்கள் கலங்குவது அணுகுண்டுகளாலுமல்ல, கைத்துப்பாக்கியாலும் அல்ல, அன்பற்ற இதயங்களால்தான்'' மனிதன் அன்பு செய்யப் படைக்கப்பட்டவன், அன்பில் கலந்துறவாட உருவாக்கப்பட்டவன், மனிதனை, மனிதன் மதிக்காவிட்டால யார் தான் அவனை மதிப்பார்? துப்பாக்கி ஏந்தியோ, வாள்கொண்டோ, பொல்லுத்தடிகளாலோ, ஒருவனை அழித்து அவனைக் கொன்று இன்பங் காண்பவனுக்கும், வர்மம் தீர்ப்பவனுக்கும் ஒரு நாள் அதே மரணம் வராமலா போய்விடும்?

ஒருவன் தன்னுடைய வாழ்வை நேசிப்பானேயாகில் முதலில் அவன் தன் அயலானின் வாழ்வைத்தான் நேசிக்க வேண்டும். அடுத்தவருடைய நல்வாழ்வில் இன்பவாழ்வில் ஆசை வைக்க வேண்டும். அடுத்தவனுக்கு குழிதோண்டுபவன் சிலவேளை அவனே தன்குழியில் விழ வேண்டி வரும். ''மனிதனை, மனிதன் சாப்பிடுறுண்டா அருமைத் தம்பி, இது மாறுவதெப்போ, தீருவதெப்போ நம்ம கவலை.'' அன்று பாடிய கவிஞனின் இப்பாடல், இன்று நம்மத்தியில் பல வடிவங்களில் உருவெடுத்து அலைமோதுவதைக் காண முடிகிறது.

இதற்கொரு முற்றுப்புள்ளி வைக்கக் கூடாதா? என்று தணியும் இந்தத் தாகம்? ''நான் தாகமாயிருக்கின்றேன்'' இது இயேசுகிறீஸ்துவின் ஏக்கக்குரல், அதுபோல் இன்றைய உலகில், நாம் வாழும் சமுகாயத்தில் எத்தனையோ கிறீஸ்துக்கள், அன்பிற்காக ஏங்கி, ஏங்கி தாகமாயிருக்கிறார்கள். என்று தணியும் இந்தத் தாகம்?

**பெனடிக் விக்ரர்**
**தெரணியகலை.**

# மிதக்குந் தமிழ்

செந்தமிழ், முத்தமிழ், இன்தமிழ், சங்கத் தமிழ் என்றெல்லாம் தமிழ் மொழிக்குப் பெயர்கள் உண்டு. இப்போது ஒரு புதுத்தமிழ் உருவாகி வருகிறது. அதுதான் மிதக்குந்தமிழ். எழுதும்போதும் சொற்கள் ஒன்றோடொன்று சேராது தண்ணீரில் எண்ணெய் துளியாக மிதப்பது போன்று சொற்களை எழுதுவதுதான் இப்புதுதமிழ்.

வாழைப்பழம்
தமிழ்ப்பண்பாடு
பக்கத்துக்காடு
பூச்சூடி

என்ற இலக்கண முறைப்படி சேர்ந்த சொற்களை

வாழை பழம்
தமிழ் பண்பாடு
பக்கத்து காடு
பூ சூடி

என்று குறைத்து எழுதுகின்றார்கள்.

ஆங்கில மொழியிற் சொற்கள் ஒன்று சேரும் பொழுது பேச்சில் மாத்திரம் ஒலி வேறுபாடு மட்டும் உண்டாகும். ஆனால், எழுதும்போது சேர்வதில்லை. சில வேளைகளில் இரண்டு சொற்களுக்கிடையில் சிறு கோடு பெற்று Compound - Word ஆகும்.

இம்முறை தமிழிற்கியைந்து வராது என்பதை நாம் கவனிக்கவேண்டும். இம்மிதக்கும் தமிழ், தமிழ் மொழி மரபுக்கொவ்வாதது. மா பழம், கடல் கப்பல் என்னும்போது இவை இவ்விரண்டு சொற்களாகின்றன. மாம்பழம், கடற்கப்பல் என்னும்போது தனிச் சொற்களாய்ச் சேர்கின்றன.

உரிய இலக்கண விதிகளைக் கற்க வசதியில்லாதவர்கள், பழைய நூல்களை வாசிக்கும்போது சொற்கள் எவ்வாறு இணைந்து வருகின்றன என்பதனை அனுபவம் மூலம் அறிந்து கொள்ளலாம். இதனால் மிதக்கும் தமிழை அகற்றிவிடலாம். மிளிரும் தமிழைப் பேணலாம்.

நன்றி :
**'நிழல்' - கனடா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரும்பு இதயங்களும் திறவுகோல்களும்

( ஒரு பொறிபறக்கும் கவிதை )

( மூதூர் ஜெயராஜ் )

மனிதர்களே!
உங்கள் தசையினாலான இருதயங்களை
எங்கோ புதைத்து விட்டு
இரும்பினால் இதயங்களை
எப்போது செய்து பொருத்திக்கொண்டீர்கள்?

உங்கள்
நரம்புகளில் ஓடியதென்ன?
இரத்தமா! இனவெறியா!!

உங்கள்
கண்களில் தெரிந்ததென்ன
கருணையா! கொலைவெறியா!!

இந்தத் தேசத்தின்
தெருப் புழுதியிலோடிய
இரத்த ஆற்றில்
காகிதக் கப்பல்களாய் நீங்கள்
மிதக்கவிட்டு ரசித்தது;

உயிரற்ற மனித உடல்களையல்ல.
ஒரு சிறிய தீவின்
தேசிய உணர்வுகளை -

வீதிகள் தோறும் நீங்கள்
வேட்டையாடிச் சுட்டெரித்தது
மனிதர்களையல்ல -
மனிதத் தன்மைகளை

உங்கள்
இன - மத அரிவாளால்,
சில
அனாதைகளையும் - அபலைகளையும்தானே
உங்களால் அறுவடை செய்யமுடிந்தது;

நேற்று -
வாட்களையும் தடிகளையும்
ஏந்திய கைகளால்தானே
நாளை -
வேதச் சுவடிகளை ஏந்தப்போகிறீர்கள் -
இரத்தச் சகதிபடிந்த கால்களால்தானே
கோவில்களையும் மசூதிகளையும் நிரப்பப்போகிறீர்கள்.

துருப்பிடித்துப் போகுமுன்
கறைபடிந்த உங்கள்
இரும்பு இதயங்களின்
திறவு கோல்களைத் தேடிக்கொள்ளுங்கள்.

மனிதர்களையல்ல -
உங்கள் -
மிருகத்தனங்களை வேட்டையாடுங்கள்.
வீடுகளையல்ல -
உங்கள்
வெறித்தனங்களைத் தீக்கிரையாக்குங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இளைஞர் அரங்கம்

# முன்னேற்றம்

தனி நபர் வாழ்விலும் — குடும்ப நிலையிலும்
கிராமியச் சூழலிலும் — பிரதேச மட்டத்திலும்
தேசிய அடிப்படையிலும் — உலகளாவிய ரீதியிலும்

முன்னேற்றம் பற்றிய பேச்சுக்களும், திட்டங்களும், செயற்பாடுகளும் பரந்து நிலை கொண்டுள்ளன. குறிப்பாக உலகின் தெற்கு நாடுகள் — இன்னும் மூன்றாம் உலகு எனக் கொள்ளப்படும் பின் தங்கிய — வளர்முக நாடுகளில் முன்னேற்றம் — அபிவிருத்தி — வளர்ச்சிபற்றி நிறைய, நிறையப் பேசப்படுகின்றது.

- கூட்டங்களிலும் — கருத்தரங்குகளிலும்
- மகாநாடுகளிலும் — பத்திரிகைகளிலும்
- வானொலிகளிலும் — தொலைக்காட்சிகளிலும்

இவற்றிற்கு செலவிடப்படும் பணம், நேரம், வளம் எவ்வளவு என்பதை நாம் அறிவோம்.

வளர்முக நாட்டு மக்கள் வெறுமனே, விருத்தியடைந்தநாடுகளில் வாழும் மக்களின் வசதிகளை, சௌகரியங்களை, தொழில்நுட்பங்களை பார்த்துவிட்டு அவ்வாறு நாமும் அனுபவிக்க, எம் நாடும் விருத்தியடையாதா? என அங்கலாய்க்கின்றனர்.

முன்னேறிய நாட்டு மக்களும் மகிழ்வாகவும், நிறைவாகவும், சுதந்திரமாகவும் வாழ்கிறார்களா? என வினவினால், இல்லை என்றே சொல்லவேண்டும். அந்நாடுகளில். மக்களிடம் பணம், பொருள், வசதிகள் இருக்கலாம் ஆனால் மனித வளர்ச்சி, சமாதானமான வாழ்க்கை, அமைதியான சூழல் இல்லையே.

மனித வாழ்வின் நிறைவும் — முழுமையும் அவற்றில்தானே தங்கியுள்ளது. முன்னேற்றம் என்பது இவைதானே. இவற்றில்தானே நாம் முதலில் விருத்தியடைய வேண்டும்.


எனவே,

மக்களிடம் பொது அபிப்பிராயங்களைத் தோற்றுவிப்போர், சமூகங்களின் வாழ்வை நிர்ணயிக்கும் தலைவர்கள், அரசியற் தலைவர்கள், சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஆசிரியர்கள், திட்டமிடுவோர், இயக்குவோர், வழிநடத்துவோர், போர்க் கருவிகளை உற்பத்தி செய்வோர், அவற்றை சந்தைப்படுத்துவோர், வியாபார நடுவர்கள், முகவர்கள் அனைவரும் தாராள மனங்கொண்டு, சீரிய சிந்தனையுடன் மனித முன்னேற்றம் ஏற்பட, அவற்றிற்கான சமாதானம், அமைதி ஆகியவற்றிற்கு வழிதேட உழைக்க வேண்டும் என அன்புக் குரல் கொடுப்பது —

— கலையுலகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "யாவும் பரீட்சை மயம்"

— பெரிய கல்லாறு எஸ். கிருஷ்ணகுமார் —

*பரீட்சை! எந்த புண்ணியவான் இந்த வார்த்தையைக் கண்டுபிடித்தானே அவனை என்றுமே இந்த உலகம் மறந்துவிடாது.*

பரீட்சை எவ்வளவு சுலபமான வார்த்தை இந்தப் பரீட்சை என்னும் வார்த்தைக்கு அர்த்தத்தை ஒழுங்காக உணர்ந்திருந்தால் இப்படியொரு வார்த்தையை உபயோகிக்கத் துணிந்திருப்பார்களா? பரீட்சை என்ற வார்த்தைக்கு சரியான அர்த்தம் ஒன்று இருக்குமானுல் அது வாழ்க்கையின் போராட்டம் என்று தான் கூறவேண்டும்.

பரீட்சை என்ற நான்கு எழுத்துக்களுக்குள் அடங்கும் இந்த வார்த்தையைக் கண்டு பிடித்து மக்கள் வாழ்க்கையில் பெரும் சிக்கலையே ஏற்படுத்தி விட்டனர். மனிதனுடைய வாழ்க்கையில் யாவுமே பரீட்சை மயம் தானே! எப்படி என்று கேட்கிறீர்களா! அதையும் கொஞ்சம் பார்ப்போம்.

தாயின் வயிற்றில் குழந்தை கருவாக இருக்கும் பொழுதே இங்கு பலர் பந்தயமென்ற பெயரில் ஒரு பரீட்சையில் தானே ஈடுபடுகிறுர்கள் பிறக்கும் குழந்தை ஆணு? பெண்ணு? என்பதுதான் அந்தப் பரீட்சை மனித வாழ்க்கையின் ஆரம்பப்படியே, பரீட்சையோடு ஆரம்பிக்கிறது!

பிறந்த குழந்தையை உடனே தராசிலிட்டு நிறுக்து பரீட்சைக்குள்ளாக்குகின்றுர்கள், குழந்தை ஆறு அல்லது ஏழு றுத்தலுக்கு உட்பட்டிருந்தால் அந்தப் பரீட்சையில் திடசாலியான குழந்தை என்றும். குறைவான எடையையுடைய குழந்தை அந்தப் பரீட்சையில் பலயீனம் தானும்.

பிறந்த குழந்தை நாலு அல்லது ஐந்து வயதாகி நடக்கும்போது அதை பள்ளிக்கூடத்தில் சேர்ப்பதற்கும் ஒரு பரீட்சை. அந்த ஆரம்ப பரீட்சையில் சித்தியெய்திய பிறகு இனி ஒவ்வொரு வருடமும் மூன்று தவணைகளுக்கும் உண்மையான பரீட்சைதான் இது பள்ளிக்கூடத்திலே.

பள்ளிக்கூடம் விட்டு பிள்ளை வீடு வந்ததும் குழந்தை நன்ருக படிக்கிறதா? என்று தெரிந்து கொள்ளுவதில் பெற்றோரும் பரீட்சை வைக்கத் தவறுவதில்லை. இது வீட்டுப்பரீட்சை. இந்தப் பரீட்சையில் ஒழுங்காகப் பதில் சொல்லவில்லையென்றுல் பிள்ளையின் முதுகு வீங்கினுலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. பள்ளிக்கூடத்தில் ஆசிரியரின் பரீட்சை, வீட்டில் பெற்றோரின் பரீட்சை. அதுபோக 5ம் வகுப்பிலும் G.C.E இலும் சித்தியடைய அரசாங்கப் பரீட்சைகள். இதுபோனுல் இன்னும் எத்தனையோ பரீட்சைகளுக்கும் நாம் உள்ளாக வேண்டியிருக்கின்றது.

பஸ்ஸில் பிரயாணம் செய்யும்போது நமது மணிபர்ஸ் சற்று வெளியே தெரிந்தால் நாம் அதில் கவனமாக இருக்கிறோமா என்று அதனை இழுத்துப் பார்த்து பரீட்சிக்கிறுர் பிக்பக்கெட்காரர். இந்தப் பரீட்சையில் நாம் கவனமாக இருந்து வெற்றியடைந்தால் எங்கள் பணம் நம்கையில் இல்லையேல் பிக்பக்கெட்காரர் பரீட்சையில் வென்று வென்றதென்போடு பஸ்ஸிலிருந்தும் மாயமாய் மறைந்து விடுவார்.

படமாளிகைக்கு படம் பார்க்கச் சென்று அங்கு நல்ல கூட்டம் இருந்தால் அங்கும் ரிக்கட் எடுப்பதற்கு ஒரு பலப்பரீட்சை உண்டு. கியூவில் முட்டிமோதிக் கொண்டு முதலில் நிற்க முனைபவர் தான் முதல் ரிக்கட்பெறும் பரீட்சையில் வெற்றிபெறுவர். இந்தப் பலப்பரீட்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகமாக நடப்பது கலரியிலும், 2ம்வகுப்பு டிக்கட் கொடுபடுமிடங்களிலேயே.

பள்ளிக்கூடப் பரீட்சையெல்லாம் முடிந்து சித்தியடைந்து விட்டோம் என்று வைத்துக் கொள்வோம். அதன் பிறகு தொழில் தேடும் பரீட்சை. இதில் எத்தனை சிக்கலான பரீட்சைகள்,பரீட்சையில் வென்றவர்களுக்கே தொழில்.

பின்பு ஒரு காதல் பரீட்சை, அழகிய பெண் ஒருத்தியை விரும்பி காதலிக்க நேரிடும்போது பசியின்றி தூக்கம் இன்றி காலம் இன்றி அலைந்து திரிந்து அந்த அழகிய காதலியை தன்வசமே அடைய முயற்சிக்கும் காதலர்களுக்கிடையேயான பரீட்சை.

பள்ளிக்கூடப் பரீட்சை முடிந்து, அதில் சித்தியடைந்து தொழில் தேடும் பரீட்சையிலும் சித்தியடைந்து, பொழுதுபோக்கு, அப்பப் பரீட்சை, காதல்பரீட்சை இவையெல்லாவற்றிலுமே சித்தியடைந்து விட்டோமென்று எண்ணுவோம் அதன் பிறகும் ஒருபரீட்சை உண்டு. இதுதான் திருமணத்துக்கு மணமகன், மணமகள் தேடும்பரீட்சை இந்தப் பரீட்சையில் பெண்ணாக பிறந்தவள்தான் சிலவேளைகளில் அதிகம் சங்கடப்பட வேண்டியிருக்கும். மணமகனும் மணமகனின் பெற்றோர்களும் பெண பார்க்க வந்து வைக்கும் பரீட்சைகள் தான் எத்தனை? முதலில் பெண் அழகுப்பரீட்சையில் சித்தியடைய வேண்டும் அதன்பின்னர் சமையல், கல்வி இப்படி பல பரீட்சைகள். இந்தப் பரீட்சைகளில் அவள் தேர்ச்சி அடைகிருளோ இல்லையோ சீதனப்பரீட்சையில் அவள கண்டிப்பாக சித்தியடைந்தே தீரவேண்டும். இது மாப்பிள்ளை வீட்டாரின் பரீட்சை பாடங்களில் ஒரு கட்டாய பாடமாகும். இந்தப் பரீட்சையில் பலபெண்கள் நல்லமுறையில் சித்தியடையாததால்தான் அவர்கள் காலம் கடந்தும் கலியாணம் செய்யாமல் இருக்கின்றார்கள் என்பதை இரகசியமாக உங்களுக்கும் சொல்லி வைக்கின்றேன்.

கலியாணப் பரீட்சை முடிந்து எப்படியோ கலியாணமும் நடந்து முடிந்தது என்று வைத்துக் கொள்ளுங்களேன். அதன் பிறகு குடும்பம் நடத்துவதிலும் ஒரு பரீட்சை இந்தப் பரீட்சை ஒரு வருடம் இரண்டு வருடமல்ல

## ஏன்? ஏன்? ஏன்?

பாம்பு கடிக்கும்போது பதறும் நீ பாம்பை விடக் கொடிய பாவம் உன்னைக் கடிக்கும்போது பதருதது ஏன்?

இளம் தம்பதிகள் கிழத்தம்பதிகளாகும் வரை இந்தப் பரீட்சை இருந்தே தீரும். இநதப் பரீட்சையில் ஒழுங்காக நடந்து இருவரும் மனமொத்து சித்திபெறுவிட்டால் அதனுல் விவாகரத்து, கோடு, காடு, மேடென்றெல்லாம் அலைய நேரிடும். அதனுல் குடும்பத்தலைவன் முன்கோபியாக இருந்தால் குடும்பத்தலைவி பொறுமை என்ற பரீட்சையிலும் பொதுவாக சித்தியடைந்திருப்பது நல்லதென்று சொல்லி வைக்கின்றேன்.

கலியாணம் செய்து குடும்பம் நடத்தி பிள்ளைகளையும் பெற்றுவிட்டால் அந்தக் குழந்தைகளை அடிக்கடி நல்லபுத்திமதி, நல்நடத்தை என்ற பரீட்சைகளை வைத்து வளர்க்க வேண்டும். இல்லையேல் அந்தக் குழந்தைகளே வளர்ந்ததும் தங்கள் பெற்றோர்களை பரீட்சை செய்து பார்க்க ஆரம்பித்து விடுவார்கள்.

இப்படியே மனித வாழ்நாள் முழுவதுமே பரீட்சைமயம். ஏதோ ஒரு குறிப்பிட்ட காலம் வரை பரீட்சைக்குப் போகலாம் அதில் தேறிய பிறகு சுகமாக வாழலாம் என்றுல் அதுதான் முடிவதில்லை. வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சமும் பரீட்சையாகவே இருக்கின்றது.

மனிதன் வாழும்போது பரீட்சைக்குள்ளாக்கப்படுகின்றுன் அவன் செத்து, பிணமாகி பெயரழிந்து உருவழிந்த பின்னும் அவன் ஆத்மாவுக்கு ஒரு பரீட்சை. அதுதான் சொர்க்கமா அல்லது நரகமா எனும் பரீட்சை.

இப்படியே மனிதப் பிறவிக்கு ஏற்படும் பரீட்சைகளைக் கணக்கிட்டுப் பார்த்தால் யாவும் பரீட்சைமயம் என்ற விளக்கம் தான் புரியும்! எப்படியிருக்கிறது, மனித வாழ்க்கையும் அவர்களுக்கு ஏற்படும் பரீட்சைகளும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறித்தவத் தமிழிழ்ப்புலவர்

# மாயூரம் வேதநாயகம் பிள்ளை

தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றில் என்றும் நிலைத்து நிற்கின்ற - நினைவு கூரப்படுகின்றவர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்கள் இவர் எழுதிய பிரதாப முதலியார் சரித்திரம் 1876ம் ஆண்டு வெளிவந்தது. இதுவே தமிழில் வெளிவந்த முதல் நாவலாகும். ''இது ஒரு சிறந்த நாவலுக்குரிய வடிவமைப்பைக் கொண்டிரா விட்டாலும் இதன் வழியாக தமிழ் இலக்கிய உலகுக்கு ஒரு புதிய பாதையை வகுத்துக்கொடுத்த பெருமை இவருக்கு உண்டு'' என்று பிரபல இலக்கிய விமர்சகர் பேராசிரியர் சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிடுகிறார்.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் நெருங்கிய நண்பரிவர். கோபால கிருஷ்ண பாரதியாரிடம் தமிழ் இசையின் நுட்பங்களைத் தெரிந்து கொண்டார். இதனால் எளிய இலக்கிய நயம்மிகுந்த இசைப்பாடல்கள் பலவற்றை இயற்றித் தமிழ் உலகுக்கு அளித்தார்.

மாவட்ட நீதிபதியாக - உயர்ந்த பண்பாளராக, சிறந்த கிறிஸ்தவராக, சமூக சேவகராக வளர்ந்த இவர் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் குறிப்பிடத்தகுந்த வராவார்,

சென்ற நூற்றாண்டில் தமிழகத்தில் வாழ்ந்த சான்றோர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்கள்.

இவர் புகழ் பெற்ற புலவர். தமிழ் இலக்கியத்தில் 'நாவல்' என்னும் இலக்கிய வகையைத் தொடங்கி வாழச் செய்த பெருமையும் இவருக்கு உண்டு.

இவர் அற்புதமான ஓர் அருள் அறிஞர் இயேசு பெருமானார் வழிவகுத்துக் கொடுத்த அன்பு வாழ்வைப் பின் பற்றியவர். இடும்பை இல்லாது குடும்பம் நடத்தியவர்.

தன்னைப் போல் பிறரும் தழைத்தோங்க வேண்டும் என்று விரும்பினார். மக்கள் எல்லோரும் ஒழுக்கமும், அன்பும், அறிவும் நிறைந்தவர்களாக விளங்க வேண்டும் என்று ஆசை கொண்டார்.

எளிய தமிழில் எல்லோரும் புரிந்து கொள்ளும் வகையில் தனது கருத்துக்களைத் தூவி, இசையோடு இணைத்து இனிய பல பாடல்களைப் பாடி வைத்தார்.

இப்பாடல்களைப் பாடி மனநிறைவு கொண்டனர் பலர். இப்பாடல்களில் பொதிந்துள்ள கருத்துக் கனிகளைச் சுவைத்து ஆன்ம ஆரோக்கியம் பெற்றனர் அனேகர்.பொதுவாக மக்களுக்கு அறிவுச் சுடராக, சிறந்த வழி காட்டியாக இவருடைய பாடல்கள் அமைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்கள் தங்களுடைய பாலப்பருவத்திலே இப்படித்தான் வாழவேண்டும் என்னும் படிப்பினையை சுவையாக ஊட்டுகிறார் இப்படி;

உற்றவரே எனைப் பெற்றவரே - தினம்
உமக்கே நமஸ்காரம்.
முற்றுமே நீர் செய்த உதவிக்கு நான் என்ன
மொழிவேன் உபசாரம்
பத்துமாதம் என்னை வயிற்றிலே சுமந்து
பல துயர் சகித்தீரே
எத்தனை பிராண சங்கடமுடனே எனை
ஈன்று நிர்வகித்தீரே!
மண்பிள்ளையாயினும் தன்பிள்ளை என்றெனை
மகிழ்ந்து ஆதரித்தீரே
பணிவுடன் என் பொருட்டாக் நீர் பலவரையும்
பணிந்து உபசரித்தீரே!

இவ்வளவு எளிமையான பாடலுக்கு விளக்கம் தேவையா? பாட்டின் கருத்து கற்கண்டாக இனிக்கிறது. சொற்களின் அமைப்பு கோயில் மணி ஓசைபோல் இனிமையாக ஒலிக்கிறது.

ஒரு தந்தை தன் பிள்ளைக்கு எவ்வாறு பக்குவமாக அறிவுரை வழங்க வேண்டும்? இதையும் எவ்வளவு எளிமையான பாடலில் சுவையாகப் பாடி வழிகாட்டுகிறார் பாருங்கள்.

'மார்க்கம் இது மகனே - சந்திரன்
தோற்கும் எழில் முகனே!

புகழுக்கு மயங்காதவர் எவரும் இல்லை அல்லவா? இதை நன்கு புரிந்து கொண்ட வேதநாயகர் சந்திரன் தோற்கும் எழில் முகனே என்று மகனது முகஎழிலை வர்ணித்து புகழ் மழையில் மனம் நனைந்த நிலையில் அறிவு விதைகளை பக்குவமாக நடுகிறார்.

மார்க்கம் இது மகனே - சந்திரன்
தோற்கும் எழில் முகனே!
மூர்க்கருடன் உறவாடாதே - பழி
மூண்டிடும் சூது விளையாடாதே!
யார்க்கும் ஒரு பொய் சொல்லக் கூடாதே- மது
பானம் விரும்பி மனம் வாடாதே!

ஆஹா! எவ்வளவு பக்குவமாகப் புத்தி புகட்டுகிறார் பாருங்கள்.

மகளுக்கு அறிவுரை வழங்கும் அழகையும் பார்ப்போம்

புத்தியிது மகளே - உனக்கு நற்
புத்தியிது மகளே!
நித்தியமும் பரன் நேசம் விடாதே
சத்திய மார்க்கத்தை தாண்டிக் கெடாதே.
ஆலயம், குருக்களை அசட்டை பண்ணாதே!
அடிக்கடி ஜெபம் செய்யாதிருக்க ஒண்ணாதே
காலந்தனை வீணில் கழிக்க எண்ணாதே
கண்ணே பிச்சையிடாமல் உண்ணாதே!

---

டி. மரிய ஜோசப்

---

எவ்வளவு பெரிய விஷயங்களை எளிதாக உள்ளடக்கிப் போதிக்கிறார்.

இன்னும் மனைவி தனது கணவனோடு கூடி வாழவேண்டும். இணைந்து இருத்தல் வேண்டும் என்ற கருத்தை மையமாக வைத்து எவ்வளவு அருமையாகப் பாடுகிறார்.

அரும்பிழை செய்து பத்தா
அன்பை முறிக்கலாமோ?
அணைகடந்தால் வெள்ளத்தை
ஆரும் முறிக்கலாமோ?
கரும்புருசி என்று
வேரோடு பறிக்கலாமோ?
கண்ணானவரைப் புண்ணாக்கி
பிரியலாமோ!
கணவனைப் பகைத்தவள்
கரையேறுவதேடி.
கடல் கொதித்தால் விளாவத்
தண்ணீர் எங்கே ஓதடி
உணர்வாக நீ நடந்தால்
உண்டோ ஒரு தீதடி
உறுதி நான் சொல்லச் சொல்ல
உனக்கேன் இன்னம் வாதடி
மார்க்கம் அல்லடி மானே கணவருடன்
மூர்க்கம் செய்வதுதானே.

---

சினங்கொண்டபிறகு சிந்திப்பதைவிட, சிந்தித்த பிறகு சினங்கொள்வது நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு கணவனுடன் ஒத்துவாழும் வித்தையை எவ்வளவு அழகாகப் பெண்களுக்குப் போதிக்கிறார்; அறிவுரை வழங்குகிறார்.

சர்வசமய சமரசக் கீர்த்தனைகள் பாடி சமய ஒற்றுமைக்கு வழிகாட்டியவர் இவர்.

உயர்ந்த எண்ணங்களை எவ்வளவு இலக்கிய நயத்தோடு எளிமையாக, விற்பன்னர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்கள் தனது பாடல்களில் ஆண்டுள்ளார் என்பதை நினைத்து நினைத்து வியப்படைகிறோம்.

ஓசை இனிமையும், சொல்லாட்சிச் சிறப்பும் பொருள் நலனுக்கு இசைந்து இணைந்து இனிமை விருந்தாக இவருடைய ஒவ்வொரு பாடல்களும் ஒளிர்கின்றன.

தமிழ் இலக்கியச் சோலையிலே எழிலும், மணமும், சுவையும் குன்றாவண்ணம் பல அற்புதமான இலக்கியக் கனிகளைப் படைத்துத் தந்து நீங்கா நினைவுச் சின்னமாக நமது இதயத்தில் இடம் பெற்றிருப்பவர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்கள்.

நீங்காத நினைவானாய். . . .

திருமதி. மேரி திரேஸ் பிரான்சீஸ் அவர்களின்

# ஓராண்டு நினைவு

மலர்வு :- 17 - 8 - 1917



உதிர்வு:- 25 - 2 - 1987.

25 — 02 — 1988

"மனையது சிறந்து எங்கள் மாண்பினை ஒளிர வைத்த இணையிலாச் சுடர் விளக்கு அணைந்தது ஓய்ந்ததன்றோ - எங்கள் ஆற்றொணாத் துயரம் நீங்க யாரிடம் செல்வோம் நாங்கள் எம் கண்ணீரின் அஞ்சலியும் கடல் கொள்ளா வேண்டுதலும் உன்னத வாழ்வில் உம்மை உரியவராய் ஆக்குதற்கே"

அஞ்சலியும் வேண்டுதலும்

கணவர்: ச. பிரான்சீஸ், இவருடன்
பிள்ளைகள் - மருமக்கள்
பேரப்பிள்ளைகளும்.

சகோதரன்: சா. பெனடிக்ற் அவர்களும்.

கண்ணுறும் அனைவரையும் கடவுளிடம் கருத்துடன் வேண்டுமாறு கேட்டுக்கொள்கின்றோம். நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் மகன் வளராமல் இப்படியே இருக்கட்டும்

செ. குணரத்தினம்

என்றென்றும் பதினாறு வயதாய் மார்க்கண்டன்
இருந்தது போலல்லாமல் எனதுபிள்ளை
என்றென்றும் பதிமூன்று வயதாய் வாழ
எவர்தருவார் வரமென்று எனதுநெஞ்சம்
இன்றும்தான் அழுகிறதே! ஐயோ இந்த
இலங்கையிலே ஏன் தமிழன்பிறந்தான்! காடு,
குன்றுகளில் குரங்காகப் பிறந்தால் கூட
குதூகலமாய் சுதந்திரமாய் வாழ்ந்திருப்பான்!

''மகன் இருக்கா!'' எனக்கேட்டு மண்டபத்துள்
முயலடிக்கப் பதுங்குதல்போல் கிங்கரர்கள்
நகம்கடித்துப் பீதியுடன் இருக்கும் மைந்தன்
நரம்புகளை உருவுதல்போல் பார்க்கின்றாரே!
இனம் தமிழர் என்பதனால்தானே இந்த
இழிவுநிலை எமக்கின்று வந்துபோச்சு!
மனம் இரும்பு கொண்டவர்முன் உயிரைக்காத்து
மானமுடன் இந்நாட்டில் வாழ்வதெப்போ!

தன்மானத் தமிழனுக்கு மகன் பிறந்தால்
தப்பாமோ! இதுஎன்ன நீதிதேவா!
எண்ணமெல்லாம் உயிர்குடிக்கும் ஆசை கொண்ட
எழியவர்க்கு மகன், தம்பி இருக்கும்போது
உண்மை யன்பு பாசமுள்ள தமிழனுக்கு
ஒருமகனும் பிறந்கிடவே கூடாதாமோ!
கண்மூடித் தனமான கேள்வி - செய்கை
கனகாலம் நிலைக்காது அழிந்தேபோகும்!

வியர்வைசிந்தி நானுழைக்கும் உழைப்பில் பிள்ளை
விர் ரென்று வளர்வதையார் தடுக்கக்கூடும்!
பயமின்றிப் படுகொலைகள் செய்து ஈட்டும்
பணத்தினிலா என்பிள்ளை வளருகின்றான்!
துயரமெந்தன் இதயத்தைச் சுருட்டி வாட்டும்
துன்பத்தை யாரறிவார்! இறைவா, நாட்டில்
பயமோடி ஒழிகின்ற வரையென் பிள்ளை
பதிமூன்று வயதாக இருக்கச்செய்வாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# தெளிவில் பிறக்கும் தியாகங்கள்

தமிழ்ச்செல்வன் மாசிலாமணி

ஆதவன் உதித்து வெகு நேரமாகி விட்டது.


நிர்மூலமான மனதோடு படுக்கையில் புரண்டு கொண்டிருந்த அமல்ராஜ் ஒரு தீர்க்கமான முடிவோடு எழுந்து உட்கார்ந்தான். வீடு வெறிச்சோடி அமைதியாகவிருந்தது. அவன் அன்னை.தங்கையின் பிரசவத்திற்காக திருமலை சென்றுவிட்டாள். தம்பி ஸ்டீபன் நேரத்தோடே எழுந்து; ரெக்னிக்கல் காலேஜுக்குச் சென்று விட்டான்.

அமல்ராஜ் தனது முடிவை மீண்டும் ஒருமுறை தடவிப்பார்த்து திருப்தி கொள்கிறான். இனிமேல்... அந்த வஞ்சகி றெஜினாவின் முகத்தில் விழிக்கவே கூடாது தலைநகரில் தனக்குத் தெரிந்த ஒரு 'பெரும் புள்ளியைப்' பிடித்து இடமாற்றம் பெற்று தூர இடமொன்றுக்குச் சென்றுவிடுவது. இதுவே அவன் முடிவு.

''அவளே நான்; அவளே என்வாழ்வு, அவளே என் உயிர்'' என்று அவளே எண்ணமெல்லாம் வியாபிக்க ஆயிரமாயிரம் கற்பனைகளை சுமந்துகொண்டிருந்த அவள்- றெஜினா அப்படிப்பட்டவளா? அவள் இதற்கு முன்பே ஒருவனை...! நினைக்கவே இதயம் வெடித்து விடுமாப் போல இருந்தது.

''வஞ்சகி...... துரோகி, ஏமாற்றுக்காரி... சாகசக்காரி ... மறைக்க விரும்பவில்லையாம் நேர்மையோடு பேசுகிறாளாம்...... எவ்வளவு பெரிய நடிப்பு......'' என்றெல்லாம் திட்டியபடியே எழுந்து, பயித்தியக்காரனைப் போல் அறையில் அங்குமிங்கும் நடைபயின்றான்.

❋ ❋



அமல்ராஜ் அந்தப் பட்டணத்திலுள்ள அலுவலகமொன்றில் உயர் உத்தியோகம் பார்ப்பவன். றெஜினா அதே பட்டணத்திலுள்ள பிரபல மகளிர் பாடசாலையில் ஆசிரியையாகப் பணியாற்றுபவள். ஊர் மன்னார்.

அவனுடைய அலுவலகத்திற்கு அந்தப் பாடசாலையைக் கடந்தே செல்லவேண்டும். வழியில் எதிர்எதிரே சந்திப்புகள். நாட்கள் நகர்ந்தன. அண்ணலும் நோக்க அவளும் நோக்க, அடுத்து மலர்ந்த நாட்களில் புன்னகைகள் பரிமாற, பின்பு 'குட்மோர்னிங்' தொடங்கி, கடிதங்கள் மாறி சந்தர்ப்பங்களை வரவழைத்துக் கொண்டு சந்திப்புகளாகி — அவைகள் இறுக்கமாகி..

காலமகள் வேகமாக ஓடிக்கொண்டிருந்தாள். அவனுக்காக அவள்; அவளுக்காக அவன். இருவருக்காக உலகம், என்ற நினைப்பில் வரையறையோடு பழகிய அவர்கள் திருமணம் என்ற நிலைக்கு வந்த போதுதான் - அதுவும் நேற்று மாலையே அது நடந்தது.

வழமையாக சந்திக்கும் இடத்தில் இருவரும் சந்தித்து எதிர்கால வாழ்வைப்பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டநேரம் பேசிஞர்கள், திட்டங்களைப் பரிசீலித்தார்கள்.

அப்போதுதான் அவள் பீடிகையோடு அதைச் சொன்ஞள் ''அமல்... என்னைப் பொறுத்தவரை உங்களிடம் மறைத்துவைக்க ரகசியம் என்று ஒன்றுமே இல்லை... ஆனுலும் ஒன்றே ஒன்றுள்ளது. அதைச் சொன்ஞல்தான் என் மனச்சாட்சியும் அமைதி பெறும். நேர்மையையும் உண்மையையும் நான் எப்போதும் இரு கண்களாக மதிப்பவள். நீங்கள் உலகம் தெரிந்தவர். அறிவுள்ளவர். ஆகவே என்னைத் தவருக மட்டும் எண்ண மாட்டீர்கள்...'' இடைமறித்தான் அமல்ராஜ் முகத்தில் ஆயிரம் கேள்விக் குறிகள்.

''ரெஜி... இப்படி பேசிக் கொண்டே போஞல் எப்படி. பட்டென்று விஷயத்தைச் சொல்.. ம்... அவசரப்படுத்திஞன். அவள் வெளிப்படையாக, ஒவ்வொரு சொல்லாகப் பேசிஞள். ''நான் ஒருவரை காதலித்தன். குறுகிய காலந்தான் ஆஞல்... வரம்புமீறல்ல என்னைத் தொடக்கூட இல்ல. அவர் பணத்திற்காக வேருெருத்தியை மணந்துகொண்டு ஏமாற்றி விட்டார். இது... உண்மை சத்தியம்... என்னை நம்புங்கள்''.

ஆயிரம் 'வோல்ட்' மின்சாரம் உடலெங்கும் பாய்ந்தது போன்ற உணர்வு. அவளை அப்படியே சுட்டெரிப்பதைப் போல பார்த்துக்கொண்டிருந்தான். எதை ஒரு அலட்சியச் சிரிப்போடு சிம்பிளாக எடுத்துக்கொள்வான் என்று நினைத்தாளோ அதுவே புயலாகமாறி விடும் என்று நினைக்கவே இல்லை. அதிர்ந்துபோய் சிலையாக நின்றவளைப் பார்த்து, ''எல்லாவற்றையும் மறந்துவிடு...'' என்றவன் எவ்வித பதிலையும் எதிர்பாராமலே ர்ரென்று நடந்தான். றெஜிஞ தனக்கு பெரியதொரு துரோகமிழைத்துவிட்டாள் என்று நினைத்துப் புழுங்கியவன் தன்னை ஏஞே நினைத்துக் கொள்ள மறந்துவிட்டான்.

அன்று இரவு நித்திரையே இல்லை. அர்த்தமின்றி எதையெதையே எண்ணிக் கலங்கிஞன்.

❀ ❀

தன் அறையில் அங்குமிங்கும் நடைபயின்று கொண்டிருந்தவன் கதவு தட்டும் சத்தம் கேட்டு நின்ருன். மீண்டும் 'டொக்.. டொக்...' சத்தம் முன்னறைக்குச் சென்று கதவை திறந்தவன் ஆச்சரியத்தால் அப்படியே நின்ருன். வந்தவர்களை வரவேற்கவும் வாய்வரவில்லை. அவனுடைய உளமுற்ற ஒரே நண்பன் செல்வகுமார், வலது கையில் சூட்கேஸோடு, இடதுபுறத் தோளில் பிரயாணப் பையோடும் நிற்க, அவனுக்குப் பின்ஞல் பெண்ணெருத்தி கைக் குழந்தையோடு புன்னகைத்து நின்ருள்.

''டேய்! அமல்... நான்... செல்வம்...'' உணர்வுபெற்றவன் ''வா... மச்சான்... வா... இப்படி இருங்கள் என்னடா! சுமார் ஒன்றரை வருடமா உன்னிடமிருந்து கடிதமே இல்லையே... கொழும்பிற்குப் போனதும்மறந்திட்டாயென்ன? அன்பான கோபம்.

''அப்படியொன்றுமில்லை... கோபப்படாதே'' என்று அமர்ந்தபடியே அந்தப் பெண்ணைப் பார்த்து, ''இவன்தான் நண்பன் அமலராஜ்.. என்றவன், டேய் மச்சான் இவள் யார் தெரியுமா? எனது மனைவி தர்சினி, அது எங்கள் குழந்தை ப்பிரியா...''

''என்ன எனக்குத் தெரியாமல் கல்யாணமும் செய்துவிட்டாயா...'' வாயைப் பிளந்தான் அமல்.

''அதுவொரு காவியம். பிறகு கதைப்பம்... எங்கடா அம்மா...'' என்ருன் செல்வகுமார் ஆவலோடு.

''தங்கச்சி வீட்டிற்குப்போயிருக்கா, தம்பி கல்லூரிக்கு போயிருக்கான்... சரி இருங்க ரீ... போட்டுக்கொண்டு வாரன்'' ''பொறு . பொறு... தர்சி... இது நமது வீடு. குழந்தையைக் கொடுத்துவிட்டு ரீ போட்டுக்கொண்டு வா...'' என்ருன் செல்வம்.

''வேண்டாம்... இரவு ரெயிலில் வந்தது களைப்பாயிருக்கும் இருவரும் உள்ளே சென்று முகம் கழுவுங்கள். அதற்குள் நானே ரீ போட்டுக் கொண்டு வாரன்'' அமல் முகம் கழுவி ரீ போட்டுக் கொண்டு வரவும், செல்வ

> உனது வார்த்தைகள் ஒவ்வொன்றும் உன்னைச் சுற்றியுள்ளவர்களுக்கு தேன்தரும் தெவிட்டாத மலர்களாக அமைய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமார் தம்பதிகள் குழந்தையை தூங்கவைத்துவிட்டு முகங்கழுவி உடைமாற்றிக் கொண்டு வரவும் நேரம் சரியாக இருந்தது.

மூவரும் தேனீரைப் பருகிக்கொண்டே அளவளாவிக் கொண்டிருந்தனர் முடிய, செல்வகுமார் தர்சினியைப் பார்த்து, ''தர்சி.. குழந்தை நன்றாகத் தூங்கட்டும். நீ போய் சமையலைப் பார்...'' என்றதும் அவள் மகிழ்ச்சியோடு சமையலறைக்குச் சென்றாள். நண்பர்கள் பேச ஆரம்பித்தனர்.

''என்ன மச்சான்... எனக்குக்கூடச் சொல்லாமல், திருமணம் செய்துவிட்டு குழந்தையோடு வந்து நிற்கிறாயே...'' இது அமல்ராஜ்

''அது பெரிய கதை... பிறகு சொல்லுறேன்... அது சரி.. உன்னுடைய 'அது' எப்படி?'' என்றான் செல்வகுமார் கண்களை சிமிட்டியபடி

''அது கிடக்கட்டும்... முதலில் உனது கதையைச் சொல்''

செல்வகுமார் கதையைச் சொன்னான்.

❖ ❖

தலைநகரிலுள்ள பண்பான தமிழ்க் குடும்பங்களில் போஸ்ட் மாஸ்ரர் அந்தோனிப்பிள்ளை குடும்பம் தனித்தன்மை கொண்டது. தமிழ்ப் பண்பு. பழக்கவழக்கம், பய பக்தி இப்படித் தொடரும். மூன்று ஆண்களும் இரண்டு பெண்களுமாக ஏழுபேர் கொண்ட குடும்பம். தாய் செபமாலைமரியாள். ஆண்பிள்ளைகளில் இருவர் வெளிநாட்டில் வேலை. பெண்களில் மூத்தவள் மணமுடித்து மன்னாரில் வாழ்கிறாள். கடைசி மகன் படிக்கிறான். மகள் மேரிதர்சினி ஆசிரியை. எவ்வித பிரச்சினையும் இல்லாத குடும்பம்.

கொழும்பு தபாற்கந்தோருக்கு மாற்றலாகி வந்து தங்க இடமின்றி தத்தளித்தபோது அன்போடு வினவி, உணவும், உறைவிடமும் தந்து காப்பாற்றியவர் அந்தோனிப்பிள்ளை. நாளடைவில் குடும்பத்தில் ஒருவனாக கணிக்கப்பட்டான்.

மேரிதர்சினியை பெரிய இடத்து வாலிபனொருவன் காதலித்தான். திருமணம் செய்துகொள்ளுவதாக எத்தனையோ உறுதிகளையும், சத்தியங்களையும் செய்தான். இறுதியில் எல்லாவற்றையும் மறந்து தர்சினிக்கு தாய்மையைத் தந்துவிட்டு, பெருஞ் சீதனத்தோடு ஒருத்தியைத் திருமணம் செய்து கொண்டு கனடாவுக்குப் போய்விட்டான்.

இது குடும்பத்தாருக்குத் தெரிந்த போது இடிந்தே போய்விட்டார்கள் மகிழ்ச்சி தாண்டவமாடிய குடும்பத்தில் கண்ணீரும், கவலையும் தாண்டவமாட பெற்றோர் தலை குனிந்து நின்றனர். இதைக் கண்டு மனமுருகிப் போன செல்வகுமார் ஒரு முடிவுக்கு வந்தான். முடிவை தர்சினிக்கும் அந்தோனிப்பிள்ளை தம்பதிகளுக்கும் தெரிவித்தபோது அந்தத் தியாகத்தைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் விட்டார்கள். அடுத்தமாதமே செல்வகுமாருக்கும் மேரிதர்சினிக்கும் திருமணம் முடிந்தது.

❖ ❖

சர்வசாதாரணமாக தன் திருமணக்கதையை சொல்லி முடித்த செல்வகுமார். அமல்ராஜைப் பார்த்து புன்னகைத்தான். அவன் உணர்வற்று அப்படியே இருக்க மனசாட்சி வேகமாகப் பேசியது.

செல்வகுமார் தொடர்ந்து பேசினான்... ஆண்டவர் கூறுவது போல் கற்பும், ஒழுக்கமும், தூய்மையும் பெண்களுக்கு மட்டுமல்ல சரிபாதி ஆண்களுக்கும் தான். ஆண்குலம் செய்யும் இப்படியான அசிங்கத்தனத்தைப் பார்த்து, வெட்கப்படுவது மட்டுமல்ல அதற்கான பிராயச்சித்தத்தையும் ஆண்களே செய்ய வேண்டும்!''

திடுக்கிட்டான் அமல்ராஜ் ''இவனல்லவோ மனிதன். இவனல்லவோ தியாகி. நான் ... உண்மையோடு நேர்மையோடு ஒருவனைக் காதலித்தேன்' என்று சொன்னதற்காக ரெஜினாவை தள்ளிவிட்டேன். இவன்...? காதலிக்கப்பட்டு கற்பிழந்து - தாயானவளை ஏற்று சந்தோஷமாக வாழ்கிறானே இவன் மனிததெய்வம் ... எனக்கு மட்டும் ஏன் இந்த நேர்மை வரவில்லை. ரெஜினாவிற்கு முன்பு, அந்த மல்லிகாவையும், ரீட்டாவையும் காதலிக்கவில்லையா...? பிறர் குற்றங்களை மன்னிக்காவிடின் நம் குற்றம் எப்படி மன்னிக்கப்படும். மனசாட்சி பேச, ரெஜினாவிடம் மானசீகமாக மன்னிப்புக் கேட்டுக்கொண்டான்!


''சரி! உனது விஷயத்தை சொல்...'' என்றான் செல்வம்.

''எனக்கும் எனது காதலி ரெஜினாவிற்கும் அடுத்தமாதம் திருமணம்'' என்று உறுதியோடு கூறியவன், இன்று பகலே ரெஜினாவைக் கண்டு, மன்னிப்புப் பெற்று இந்த மகிழ்ச்சியான செய்தியை சொல்லிவிட வேண்டுமென்று தீர்க்கமான முடிவை எடுத்துக் கொண்டான்.

(யாவும் கற்பனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கத்தோலிக்க திருச்சபையும் சமகாலப் பிரச்சினைகளும்

## ஓர் ஆய்வுரைக் கண்ணோட்டம்

— ஆனந்தா A. G. இராஜேந்திரம் —

### அத்தியாயம் 3

தனிமனிதனால் முடியாது. தனிநாடு ஒன்றினால் இது சாத்தியப்படுமா? உலக நாடுகள் சுமார் 160 வரையுள்ளவைகளின் அணுகுமுறைகளையும் சிந்தனைகளையும், பெறுமானங்களையும் இன்னும் பல இன்னோரன்னவற்றையும் ஒருமுகப்படுத்த ஒரு தனிப்பட்ட நாட்டினால் முடியாது. அது இன்னும் பல கூட்டமைப்பு, அணி என்று தலைக்குனிவாகவே போய்விடும். ஏற்கனவே வரலாற்றுப் பாடங்கள் பல கைவசம் உண்டு. அவ்வளவும் நிகழ்காலத்தின் பக்கங்கள்! நி(றை)றவெறிக்கும் பலான தென் ஆபிரிக்க நாட்டு ஆட்சியாளருக்கு என்னவகையில் அறிவைக் கொடுப்பது என்ற வகையில் ஐக்கிய நாடுகள் தாபனத்தில் இழுபறி, பொது நலவமைப்பு நாடுகளுக்குள்ளே குளறுபடி! அணிசேரா நாடுகள் என்றுதான் பெயர் ஆனால் அதில் எத்தனையோ ஸ்தாபக நாடுகள் ஏதாவது ஒரு வல்லரசினில் சாய்ந்த படிதான் நிற்கின்றன.

இது வரை பல நாடுகளில் ஒரு சமயத்தில் ஒரே மாதிரியான சூழலை உருவாக்குவதில் மத ரீதியான கொள்கைகளே வெற்றி பெற்றிருக்கின்றன. எனவே தற்போதைய தேவையின் பொருட்டு, புதிய மதம் ஒன்றை உருவாக்குவதே இதன் வழி என்பதல்ல மாறாக ஏற்கனவே உள்ளவற்றுள் பிரபல்யமும் (பெரும்பான்மை மக்களால் பின்பற்றப்படல்), ஒரு ஒழுங்கான கட்டமைப்பும் (Structure), சிறந்த நிறுவன அமைப்பும் (Organization), பொதுவான தன்மையும், வலிமையான தலைமைத்துவமும், பல நாடுகளில் இடம் பெற்றதான மத அமைப்பொன்றினாலேயே இது சாத்தியமாகலாம். இவ்வுண்மையையே பல ஐரோப்பிய நாடுகள் தமது சிந்தனையில் கொண்டிருக்கின்றன.

இந்தத் தேவைகளை ஈடுசெய்யும் தகுதி பெற்றிருப்பது இன்றைய உலகில் கத்தோலிக்கத் திருச்சபையே.

முதலில் கட்டமைப்புப் பற்றிப் பார்த்தால் இவ்வுலக நிறுவனங்களுள் ஒரு முன்னோடியான கட்டமைப்பைக் கொண்ட மிகவும் தொன்மை வாய்ந்த ஸ்தாபனமாக திருச்சபையைக் கொள்வதில் தவறேதுமில்லை, அதன் தலைமைப்பீடம் முதல், மக்கள் கூட்டம்வரை பலநாடுகளையும் ஒரு சேர அமைக்கக் கூடிய கூட்டமைப்பு அதனுடையது. தலைமை ஆயர் பாப்பரசர் - அவரது தலைமையகத்தில் பல இலாகாக்கள் (Departments) அவற்றைப் பரிபாலிக்க கருதினால்கள், அடுத்து நாடுகள் தோறும் பேராயர்கள், ஆயர்கள், துறவற சபையினர், சாதாரண பொதுமக்கள் என்று மேலிருந்து கீழ் நோக்கி ஒரு 'பிரமி'ட்டின் ஒழுங்மைப்பு திருச்சபையில் உண்டு.

பாப்பு
கருதினால்
பேராயர்கள்
ஆ ய ர் க ள்
துறவற சபை உறுப்பினர்
சாதாரண இல்லற வாசிகள்

பாப்பரசரின் அல்லது தலைமைப் பீடத்தின் தீர்மானம் பொதுமக்களைச் சுலபமாகவும், விரைவாகவும் எட்டுவதில் இக்கட்டமைப்பு (நிறுவன அமைப்பும்) துணை செய்கிறது. மேலும் இவ்வடிப்படையில், பரந்துபட்ட அத்திவாரத்தை அடித்தளமாகக் கொண்டு பலமுள்ளதாக இக்கட்டமைப்பு அமைவதால், அது சிதைவடைவதில்லை. (''நரகத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளா'') சுமார் 1953



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்களாக இக்கட்டமைப்பு இதே வயதெல்லை கொண்ட திருச்சபையில் இருந்தே வருகிறது. இதில் அழிவு ஏற்படவேயில்லை.

புரட்டஸ்தாந்து பிரிவினையையும், அங்கிலிக்கன் பிரிவையும் தொடர்ந்து இதுவரை உலகில் எத்தனையோ "திருச்சபைகள்" உருவாகிவிட்டன அவை அனைத்தினதும் முழு நோக்கம் கிறிஸ்தவத்தைப் பரப்புவது ஒன்றே என்றல்ல கத்தோலிக்க திருச்சபையின் அழிவும் அதில் ஒன்றாகும். ஆனால் திருச்சபையின் வலுவான கட்டமைப்பு அத்தகைய நோக்கங்களை இன்றுவரை கனவாகவே நிலைக்கச் செய்திருக்கிறது.

இன்று பல உலக நாடுகளில், குறிப்பாகப் பொதுவுடமை, சோசலிச நாடுகளின் அதிகாரபீடக் கட்டமைப்பு திருச்சபையை ஒத்ததாக அமைந்துள்ளமை பலருக்கும் தெரியாது.

திருச்சபையினின்று பிரிந்த, மற்ற சபைகள் தாம் எதிர்க்கும் இக்கட்டமைப்பைப் பின்பற்ற முடியா நிலையிலோ என்னவோ, இது போன்றதொரு வலுவான கட்டமைப்பை உருவாக்கிக் கொள்ளவில்லை. இதனால் ஒரு புரட்டஸ்தாந்து மூலத்தினின்றும் எத்தனையோ குட்டித் திருச்சபைகள் உருவான நிலையின்று.

அரசியல் ரீதியாகத் தமிழ்நாட்டிலே குறுகிய காலத்தினுள் கட்சி ரீதியாகச் செயற்பட்டு சாதனை அமைத்த தி. மு. க. கூட இதுபோன்றதொரு கட்டமைப்பையே பேணுகிறது என்பது அப்பட்டமான உண்மை!

முன் குறிப்பிட்டவாறு தலைமைப்பீட முடிவுகளை, கொள்கைகளை, வழிகாட்டுதலை உலகின் ஒவ்வொரு மூலைக்கும் எட்டச் செய்வதில் இக்கட்டமைப்பு பலனுள்ளதாக இருக்கிறது. இதே சமயம் இக்கட்டமைப்பின் செல்வாக்கு இன்னுமொரு அச்சத்தையும் பல நாடுகளில் ஏற்படுத்தியும் இருக்கிறது. அதாவது இன்னுமொரு வகையில் பார்த்தால் உரோமையின் (இத்தாலியின்) ஆதிக்கம் மற்ற நாடுகளைப் பாதிக்க இது சுலபமாக உதவக் கூடும் என்பதை மறுப்பதற்கில்லை. (ஆனாலும் இவ்வச்சத்தின் அடிப்படையே ஆட்டம் காணும் வகையில் உரோமைக் கருதினலல்லாதவர் இன்று பாப்பரசரானது கடவுளின் செயலே) இது வரை மதச் சார்பற்ற நாடான அமெரிக்கா வத்திக்கானுடன் ராஜரீகத் தொடர்பை ஏற்படுத்தவில்லை. அவ்வாறு ஏற்படுவதை எதிர்ப்பவர்கள், திருச்சபைக்கு எதிராகவும் வெளிப்படுத்தலாகவும் அடிப்படையில் உலக அழிவுக்கு - முடிவில் கடைசித் தீர்ப்புக்கு இட்டுச் செல்லும் ஒரு சக்திமிக்க நாட்டமைப்பை உருவாக்கும் சக்தியாகக் கத்தோலிக்கத் திருச்சபையை நோக்கவும் செய்கிறவர்களாக இருக்கிறார்கள்.

மேலும் முன் குறித்த ஆதிக்க அச்சம் காரணமாக. சீன தேசத்துப் புரட்சியை அடுத்து ஆட்சியமைத்த பொதுவுடமைவாதிகள், உரோமையின் தொடர்பை அறுத்து ஒரு புதிய தலத்திருச்சபையை உருவாக்க கட்டளையிட்டனர். இதை ஏற்க மறுத்து சிறை சென்றோர் பல்லாயிரவர், கடந்த பல மாதங்களின் முன் இவர்களுள் முக்கியமான ஆயர் ஒருவர், வயதான நிலையில் 25 வருடச் சிறைவாசத்தின் பின்னர் (அந்நாட்டு கொள்கை மாற்றங்களின் எதிரொலியாக) விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

2. நிறுவன அமைப்பைப் பொறுத்த மட்டிலும், மாற்றம் இல்லாத, ஸ்திரமான தலைமையமைப்பையும், இலாகா அமைப்புகளையும் கொண்டு முன்னோடியான அமைப்பாகக் கத்தோலிக்கத் திருச்சபை இருக்கிறது. அதன் நிறுவன அமைப்பு என்றுமே காலத்திற்கொவ்வாதது என்றதாக வரலாறு கொண்டதில்லை. நடைமுறையில் உள்ள பொருளாதார சிக்கலுக்கான நிதியுதவி நிறுவனங்கள் மற்றும் அகதிகள் பிரச்சினைகளைக் கையாள ஒரு தலைமையகம் இவையெல்லாம் அதன் காலத்தோடு செல்லுகின்ற அடையாளமாகும்.

நீ வாழ்க்கையில் தவறிப் பாவம் செய்து விட்டாய் என்பதற்காகப் பாவத்திற்கு அடிமையாகி அதிலே நின்றுவிடாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பொதுவான தன்மை, அத்துடன் பல நாடுகளிலும் நிலைபெற்ற தன்மை என்பவற்றைப் பொறுத்த வரையில் திருச்சபை ஒரு பொதுத் தன்மையுடையது என்று கூறலாம். கத்தோலிக்க (Catholic) எனும் போது அது ஆங்கிலத்தில் 'யூனிவர்சல்' (Universal) எனப்படும் உலகளாவிய ஏக ஏன்ற பொருளாகிறது இது உலகளாவிய ஒரே திருச்சபையாகும், உலகம் முழுவதும் பரவியுள்ள ஒரு திருச்சபையாகும். மேலும் அது கிறிஸ்துவின் மீட்புப் பணி என்ற உன்னத பணியை மேற்கொண்டு, கிறிஸ்தவக் கொள்கை வழி இலங்குவதால் ஒரு பொதுத்தன்மை, பொதுக் கொள்கை கொண்டது எனத் துணிந்து சொல்லலாம். இந்தப் 'பொது'மைகள் மாறாமல் இருப்பதில் வத்திக்கான் சங்கங்கள் பெரும்பணி ஆற்றுகின்றன. திருச்சபையின் கொள்கைகளும், சித்தாந்தங்களும் அன்றே போல் இன்றும் பெரும்பாலும் மாறாமல் இருக்கின்றன. ஆனால், அக்கொள்கை வழி உலக மக்களை, அவர்தம் பிரச்சினைகளை அணுகும் முறைகள் (Attitudes) மாற்றமடைந்துள்ளன காலத்தோடு மாறவேண்டியவை அணுகு முறைகளே. ஏனெனில் கிறிஸ்தவக் கொள்கை காலவரையறையற்று எல்லா வேளைக்கும் எல்லா நாட்டுக்கும் பொருந்தக் கூடியது. எனவே காலத்திற்கேற்ப அணுகு முறை மாற்றங்களை உருவாக்காது போனால் திருச்சபை கால ஓட்டத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் என்றோ பின் தங்கி விட்டிருக்கும். காலத்திற்கொவ்வாதது என்று பேர் பெற்றிருக்கும். இத்தகைய மாற்றத்திற்குட்படாத நிலையில் பிரிவினை என்ற சோதனையை அது சந்தித்த பாடத்தை மீண்டும் புதுப்பிப்பது அதன் ஆகவும் கருத்தில் கொள்ளமுடியாத திட்டமாகவே இருக்கும். அந்த நிலையைத் திருச்சபை மீண்டும் உருவாக்காது என திடமாக நம்பலாம்.

4. வலிமையான தலைமைத்துவம். என்ற வகையில் பார்ப்பதானால், உறுதியான ஆளுமையும் (Personaliti) அதே சமயம் தொய்வில்லாத தலைமைத்துவமும் ஒரு பொறுப்பான பணியை ஆற்ற எண்ணும் நிறுவனத்திற்குத் தேவை. அதே வேளை உலகளாவிய ரீதியில் அது பயனுள்ள பணியை ஆற்ற வேண்டுமானால், சருவதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்படத்தக்க தலைமைத்துவமாக அது இருக்கவும் வேண்டும். மக்களின் நலனில் ஆழ்ந்த அக்கறையும், அதே சமயம் ஒரு கட்டுப்பாடான தந்தைக்குரிய அணுகு முறையும் கொண்ட ஒரு தலைமைத்துவமே மிகுந்த பலனுள்ளதாக அமையும் காலகட்டம் இது மக்களை மகிழ்ச்சிப் படுத்த எல்லாவகைகளிலும் செயற்படும் தலைவன் உதவமாட்டான் அதே சமயம் கொஞ்சமாவது ஒதுங்கி நில்லாதவரை ஒரு தலைவன் பக்கச் சார்பு இல்லாதவனாக இருக்கமாட்டான். இன்றைய உலகில் இந்தத் தகைமை கொண்ட தலைமைத்துவம் கத்தோலிக்க திருச்சபையில் உண்டு என்று உறுதியாகக் கூறலாம்.

> நீ செய்த பாவங்களுக்காக உடனுக்குடன் கடவுள் உன்னைத் தண்டித்தால் உன்னால் ஒரு நாள் கூட முழுமையாக வாழ முடியாது

இறை அருளால் அதை அலங்கரிக்கும் தலைவர்கள் சமீப கால வரலாற்றில் மிகப் பொருத்தமானவர்களே தெரிவாகி வந்துள்ளனர் என்பது கண்கூடு.

எனவே, இன்றைய உலகில் சமாதான பாதையைக் காட்டக் கூடிய தகுதி வாய்ந்த ஒரு அமைப்பாகத் திருச்சபையும், பொருத்தமான தலைவராகப் பாப்பரசரும் அமைகிறார்கள். இந்த உண்மையைத் திருச்சபை நன்கறியும். அதே சமயம் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளும் உணர்ந்துள்ளதாக அவற்றின் நடவடிக்கைகளினின்றும் தெரிகிறது. ஐரோப்பாக் கண்டம் பலகோடிக் கத்தோலிக்கரை (சுமார் 6 கோடி மக்கள் கிழக்கைரோப்பாவில் மட்டும்) கொண்டது 1ம், 2ம் உலகப் போர்களின் மையத் தொகுதியும் இதுவாகும். எனவே இங்கு வேலை ஆரம்பமாகிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்காரத்தோப்பில் சில வண்டுகள் (ஒரு விமர்சனம்)

—எம். வி.

'கத்தோலிக்க திருச்சபையில் ஊழல்கள் மலிந்துவிட்டன'

'தமக்குள் அநீதிகளை வைத்துக் கொண்டு சமூக நீதிக்காகக் குரல்கொடுக்க திருச்சபைக்கு என்ன யோக்கியதையிருக்கிறது?'

'உலக முடிவின்போது நடக்கும் என்று கூறப்பட்ட அத்தனை அக்கிரமங்களும் இன்று கத்தோலிக்க திருச்சபையில் நடந்து கொண்டிருக்கின்றன. இதனால்தான் இன்று பலரும் கத்தோலிக்க திருச்சபையை விட்டு வெளியேறி புதிய புதிய சபைகளில் சேர்ந்து கொண்டிருக்கின்றனர்'

'இன்றும் திருச்சபையின் ஆட்சிபீடம் அடக்கு முறைகளையும், உரிமை மறுப்புகளையும்மே அமுல்படுத்திக் கொண்டிருக்கிறது'

இவ்வாறு பலதரப்பட்ட கடுமையான குற்றச்சாட்டுக்கள் கத்தோலிக்கத் திருச்சபைக்கு விரோதமாகக் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

அண்மைக் காலங்களில் உருவாகி வருகின்ற 'திடீர்' சபைகள் நற்செய்தியை அறிவிக்கின்றனவோ என்னவோ, நாத்தழும்பேற மட்டும் கத்தோலிக்க திருச்சபையைக் 'கரித்துக்' கொட்டுவதிலே காட்டும் கரிசனை இருக்கிறதே அப்பப்பா! 'இதைவிட நற்செய்தி அறிவிப்பு என்ன வேண்டிக்கிடக்கிறது' என்று கருதிவிட்டன போலும்

ஒரு சில நாடுகளின் நிலப்பரப்பும், மக்கட்தொகையும் பிறவளங்களும் சிறு நாடுகளுக்கு பயத்தையும், எரிச்சலையும் ஏற்படுத்துவதுபோல், கத்தோலிக்க திருச்சபையின் உலகளாவிய வளர்ச்சியும், பிற சிறப்புக்களும் இக் 'காளான்' சபைகளின் கண்களை உறுத்துவதில் வியப்பொன்றுமில்லை. ஆனால், இவைகள் விதைக்கும் 'விஷ' விதைகள் சுலபமாகப் பதிந்து செழித்து வளர வாகான நிலமாக பெரும்பாலான கத்தோலிக்க மக்கள் இருப்பது தான் கவலைக்குரியதும், கவனத்திற் கொள்ளப் படவேண்டியதுமாகும். இதற்குரிய பொறுப்பு பெரும்பாலும் திருச்சபை அதிகாரிகளையே சார்ந்தது. எமது சிந்தனைக்கு எட்டிய வரையில் இதற்குப் பல்வேறு காரணங்கள் உண்டு.

1. திருச்சபை அதிகாரிகளுக்கும், விசுவாசிகளுக்குமிடையே ஆழமான அன்புறவு இல்லாமை.

2. திருச்சபையைப் பற்றியும், திருமறையைப் பற்றியும் போதுமான அறிவு பொது நிலையினருக்கு இல்லாமை. அதைத் தேவைக்கேற்ப வழங்குவதில் போதிய ஆர்வமும், ஈடுபாடும் காட்டப்படுவதில்லை.

3. எமது வழிபாடுகள், ஆராதனைகளில் பாடமுறைகள் மிகுந்து பங்கெடுப்புக் குறைவாக இருத்தல். இதனால் விசுவாசிகளின் ஈடுபாடும், ஆர்வமும், உற்சாகமும் குறைதல்.

4. திருச்சபையின் தலையாய பணியாக நற்செய்தி அறிவிப்பு இருப்பினும், பிறதுறைகளில் (எ+டு. சமூகஅபிவிருத்தி, நிர்வாகம், அரசியல் போன்றவை) அதிகளவு செயற்பாடு கொள்ளுதல். (நற்செய்தி அறிவிப்பு என்பது பன்முனைப்புக் கொண்டது என்பதில் எமக்கு மறுப்பில்லை)

5. திருச்சபையின் பாரிய நிறுவன அமைப்பில் விசுவாசியின் தனிமனித உள - சமூகப் பண்புகள் அலட்சியப்படுத்தப்படல்.

6. திருச்சபை அதிகாரிகளுக்கும், விசுவாசிகளுக்கும் இடையே ஏற்படும் தனிப்பட்ட மனஸ்தாபங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. திருச்சபை அதிகாரிகள் சிலரின் தன்னலப்போக்காலும், பலயீனங்களாலும் பலரும் முன்மாதிரியாகக் கொள்ளவேண்டிய சான்று வாழ்வுக்கு ஏற்படும் களங்கங்கள்.

8. தற்கால சமூகவாழ்வில் சராசரி மனிதனைவிட சற்று உயர்ந்து நிற்கும் திருச்சபை அதிகாரிகளின் பொருளாதார வசதிகள் ஏற்படுத்தும் வர்க்க முரண்பாடுகள்.

9. தற்கால நவீன அறிவியல், பொருளாதார, அரசியல் சிந்தனைகள் சமயவாழ்வில் ஏற்படுத்தும் தாக்கங்கள்.

இவைபோன்ற பல காரணிகள் விசுவாசிகளிடையே நிச்சயமற்ற நிலைப்பாடுகளையும், அவநம்பிக்கைகளையும், தடுமாற்றங்களையும் தோற்றுவிக்கின்றன. இந்நிலை 'வேலி பாய்ந்து மேயும் மாடுகளுக்கு' வளமுள்ள வயற்காடாக விரிந்து கிடக்கிறது

திருச்சபை இத்தகைய குறைபாடுகளையும், பலவீனங்களையும் கொண்டிருப்பினும், அது தன் புனிதத் தன்மையில், அருள்வாழ்வில் என்றுமே குறைவுபட்டதல்ல. ஏனெனில், திருச்சபையின் உயிர்நிலையாக - அடித்தளமாக - தலையாக இருப்பவர் கிறீஸ்து "நிகரற்ற தம் நிறைவாலும், செயலாலும் இந்த முழுஉடலையும் தம் மாட்சிப் பெருக்கால் நிரப்புகிருர். (வத். சங். ஏடு திருச்சபை - 8)

இரத்தமும், சதையும், எலும்பும் கொண்டு அழியக்கூடிய மனித உடலுக்கு அழியாத ஆன்மா உள்ளிருந்து சிறப்புச் சேர்ப்பதுபோல் பலவீனங்களும், குறைகளும் நிறைந்த திருச்சபைக்கு கிறிஸ்து உள்ளிருந்து தமது ஆவியினுல் புனிதப்படுத்தி, பாதுகாத்து, அருள்வாழ்வில் வளரச் செய்கிருர்.

கத்தோலிக்க திருச்சபை தன்னுடைய இரண்டாயிரம் ஆண்டுகால வரலாற்றில் பல தவறுகளை இழைததிருக்கிறது அவ்வப்போது அவைகளைத் திருத்திக்கொண்டுமிருக்கிறது.

திருச்சபை தேவதைகளின் கூட்டமாகத் தன்னை எப்போதும் பிரகடனப்படுத்திக் கொண்டதல்ல. அதேவேளையில் குற்றங்களையும், அக்கிரமங்களையும் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையுமல்ல.

> நீ உனது வாழ்வில் செய்த குற்றம் பிறருக்குத் தெரிந்துவிட்டால் எவ்வளவு கலங்குகிருய்? பிறர் அறியாமல் எவ்வளவு பெரிய தவறுகளை உனது உள்ளத்திலே நீ செய்கிருய்? அதைப் பற்றி நீ ஏன் சிறிதும் கவலைப் படுவதில்லை.

கிறீஸ்துவில் எவ்வாறு இறைத்தன்மையும், மனித பலவீனங்களும் உடனிருந்தனவோ அதுபோன்று கிறிஸ்துவின் திருச்சபையிலும், அவரது ஆவியும், மனித பலவீனங்களும் இருக்கவே செய்கின்றன.

"திருச்சபையோ பாவிகளைத் தன்னுள் கொண்டிருப்பதால், தான் புனிதமானதாய் இருப்பினும், எப்போதும் தூய்மைப்படுத்தப்படவேண்டிய தேவையைத் தன்னில் கொண்டு தவம், சீர்திருத்தம் என்ற பாதையில தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது" (திருச்சபை கொள்கைத்திரட்டு வத். சங் ஏடு)

கிறீஸ்து எவ்வாறு உலக மீட்புக்காக பாவியைப் போன்று வாழ்ந்து காயப்பட்டாரோ அதேபோன்று அவரது திருச்சபையும், குற்றங்களும், குறைகளும் நிறைந்த மனித சமூகத்தை தன்னுள் சுமந்து, காயப்பட்டு கிறீஸ்துவின் மீட்பின் பலன்களை அவர்களுக்கு வழங்கி தேவைகளை நிறைவு செய்ய முயல்கின்றது.

இந்தவகையில் கத்தோலிக்க திருச்சபை மனிதகுலத்துக்கு ஆற்றியுள்ள மகத்தான பணிகளை யாரும் சுலபமாக அளவிட்டுக் கூறிவிட முடியாது. மனித சமூகத்துக்கு தேவையான அனைத்துத் துறைகளிலும் திருச்சபை பாரிய பங்களிப்புச் செய்துள்ளது; செய்தும் வருகின்றது. இவற்றை மறந்து, அல்லது புறந்தள்ளி திருச்சபையில் குற்றம் பிடிக்கவென்றே கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுத்திரியும் காமாலைக் கண்ணர்களுக்கு தினை அளவு குறைகளும் பனை அளவாகத தோன்றுவது வியப்பன்று. வரலாற்றில் இத்தகைய 'வகையறுக்களை' திருச்சபை சந்தித்தே வளர்ந்து வந்தள்ளது; தன்னைத் திருத்தவும் செய்துள்ளது. ஒரு வகையில் இத்தகைய அபாய அறிவிப்புகளும் திருச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையின் ஆரோக்கியத்துக்குத் தேவைதான். மத்திய காலத்தில் எழுந்த பேதகங்களும், குற்றச் சாட்டுகளுமே திசைமாறித் தடுமாறிக் கொண்டிருந்த திருச்சபையைத் திடப்படுத்தி விசுவாசத்தில் உறுதிகொள்ளச் செய்தது என்று வரலாறு கூறுகிறது.

ஆகவே, காலத்தின் குறிகளாகத் தோன்றும் இத்தகைய அபாய அறிவிப்புகளை திருச்சபை அலட்சியப்படுத்திவிட முடியாது. குத்துவது சிறிய முள்ளாக இருந்தாலும், அது முழு உடலுக்கும் வேதனை தருமல்லவா?

ஆனால் கத்தோலிக்க திருச்சபையை வசைபாடியே அழித்துவிடலாம், வலைவீசிப் பிடித்துவிடலாம் என்று எவர் நினைத்தாலும் அவர்கள் பரிதாபத்துக்குரியவர்களே! ஏனெனில்:

''உயிர்த்தெழுந்த ஆண்டவரின் ஆற்றலால் உள்ளிருந்தும், வெளியிருந்தும் தனக்கு வரும் இன்னல்களையும், இடுக்கண்களையும் பொறுமையாலும், அன்பாலும் மேற்கொள்ளவும், இறைவனின் மறைபொருள் தன் முழு மாட்சியுடன் தெளிவாக வெளியிடப்படும் வரை மங்கிய முறையிலானாலும் பிரமாணிக்கத்துடன் அதை உலகிற்குக் காட்டவும் திருச்சபை உறுதிபெற்றிருக்கிறது. (திருச்சபை கொ. திரட்டு - 8, வத் சங். ஏடுகள்)

## எப்போது?

நமது மனமெனும் ஆணிவேர் ஆடத் தொடங்கும்போது நமது வாழ்வெனும் மரத்திலுள்ள நற்பண்புகள் எனும் இலைகள் உதிரத் தொடங்குகின்றன.

---

நீ சாகும்போது எல்லாம் நிறைவேறிற்று என்று யேசுவைப் போல் உன்னால் கூறமுடியுமா?

# பாதரட்சை பேசினால்

தொகுப்பு : தவராஜா - ராஜி

அட மனிதர்களே!

நாங்கள் உங்களுக்கு எந்தெந்த வகையில் பயன்படுகின்றோம். ஆனால் நீங்கள் எங்களை எவ்விதம் கேவலமாகப் பயன்படுத்துகின்றீர்கள்.

திருமண வீடா?

சாவு வீடா?

கோவிலா?

ஏதாவது விஷேசமா? அங்கெல்லாம் எங்களை வெளியே நிறுத்தி அனுமதி மறுக்கின்றீர்கள் இதையாவது பொறுத்துக் கொள்ளலாம்.

பொதுக்கூட்டமா?

ஊர்வலமா?

யாரையாவது கேவலப்படுத்த வேண்டுமா? அதற்கும் எங்களை வீசி எறிந்து கேவலப்படுத்துகின்றீர்கள் ''இவர்மீது அவர் மீது செருப்பு வீச்சு என்று பேப்பரில் போட்டு படிப்பவர் மனதில் எங்களை கேவலமாக எண்ணவைக்கின்றீர்கள். எங்கள் அருமை உங்களுக்குத் தெரியவில்லை; வெயில்காலங்களில் உங்கள் பாதங்களில் சூடு ஏறாமல் காப்பது நாங்களே! மழைக் காலங்களில் உங்கள் பாதங்கள் கண்டதை மிதிக்காமல் பாதுகாப்பதும் நாங்களே! உங்களுக்கு உடல்நலம் சரிஇல்லையென்றால் உங்கள் பாதங்கள் தரையில், தண்ணீரில், படாமல் இருக்கப் பயன்படுவதும் நாங்களே! சுற்புக்கரசிகள் வீதியில் செல்லும்போது வாலிபரின் நக்கலுக்கு ஈடுகொடுக்கும் வகையில் பெண்களின் பயங்கர ஆயுதமும் நாங்களே! இதுமட்டும்தானா? ராமன் காட்டுக்குச் சென்றபோது அயோத்தியை ஆண்டது எங்கள் இனத்தைச்சேர்ந்த மகாராஜாவே என்று இராமாயணம் கூறுகின்றது. இத்தனை சிறப்புக்கள் இருந்தும் என்னபயன் நீங்கள் கொஞ்சமாவது எங்களை நினைத்துப் பார்ப்பதுண்டா நினைக்க மாட்டீர்களே? ஏன் என்றால் நாங்கள் உங்களால் உருவாக்கப்பட்டவர்கள் அல்லவா.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வாண்டு தவக்காலச் சிந்தனையாக

# திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர்

## வழங்கிய செய்தியின் சாரம்



நோன்பென்பது நாம் உணவுண்ணாது இருப்பது அல்ல. நமது உணவை உணவின்றி வாடும் இல்லாதரோடு பகிர்ந்து கொள்வது தான்.

ஏழைகளுக்காக எமது வீட்டு வாயில்களை திறந்து வைக்க வேண்டும்.

நம்மைச் சுற்றி நடக்கும் அவலங்களை நாம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

இவ்வுலகில் கோடிக்கணக்கான குழந்தைகள் தினமும் நோயினாலும், வறுமையினாலும், போரினாலும் மடிந்து கொண்டிருக்கின்றனர். இதற்காக இன்றைய நாகரீக உலகம் வெட்கப்படவேண்டும்.

நம்மிடம் இருக்கும் சுயநலன் என்றும் பெரிய பாவத்தை விட்டொழித்து பிறருக்காக, சமூகத்துக்காக உழைக்க முன்வரவேண்டும்

# பகிர்ந்து கொள்வோம்

நற்செய்தி ஏடுகள் கிறிஸ்து கடலில் நடந்து சென்ற புதுமையை குறிப்பிட்டுள்ளன. நள்ளிரவில் மீன் பிடித்துக் கொண்டிருந்த தமது சிடர்களை நோக்கி அவர் கடலில் நடந்து சென்றார் என்று அவை விபரிக்கின்றன. இயற்கையின் தமக்குள்ள அதிகாரத்தைக் காட்டவும், தமது சீடர்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்தவும் இத்தகைய அருங்குறிகளை அவர் ஆற்றினார்,

ஆனால் இன்னொரு காரணமும் உண்டாம் என்று நகைச்சுவை துணுக்கொன்று கூறுகிறது. அண்மையில் தமிழ் நாட்டு சஞ்சிகையொன்றில் வெளிவந்து நாம் படித்துத் சுவைத்ததை நேயர்களுக்கும் சுவைக்கத் தருகின்றோம்.

ஒரு ஸ்கொட்லாந்துக்காரர் புண்ணிய பூமியான பாலஸ்தீனத்துக்குச் சென்றார். கலிலேயாக் கடலில் படகில் செல்ல விரும்பினார். படகுக்காரருக்கும், அவருக்கும் உரையாடல் நிகழ்ந்தது.

'ஐயா! படகிற்கு கூலி என்ன வேண்டும்?'

'மூன்று ஸிலிங் ஆறுபென்ஸ்'

'அடேயப்பா எங்களூரில் வெறும் ஆறுபென்ஸ் மட்டுந்தானே!

'அது உங்களூரையா இது கலிலேயக் கடலாக்கும், இயேசுக்கிறிஸ்து நடந்து சென்ற கடலையா இது'


'அதுதானே பார்த்தேன்' உங்கள் அநியாயப் படகுக் கூலியை பாவம் அந்த ஏழையால் எப்படிக் கொடுக்க முடியும்? அதனால் தான் அவர் கடல்மேல் நடந்து சென்றிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி - 48

## (புனித இராயப்பர் எழுதிய முதலாவது திருமடல்)




பரிசு :

ரூபா 50/-, 25/-

முடிவுத் திகதி :

**31 - 03 - 88**

முழுப்பெயர்:..........................................................................

முகவரி:..........................................................................

..........................................................................

### இடமிருந்து வலம்

1. இறைவன் மனிதரிடம் கொள்ளும் அன்பு.
4. ஆபிரகாமைத் தலைவன் என அழைத்தவன்.
6. யேசுவின் பெயருக்காகக் கூறப்பட்டது தடுமாறியுள்ளது.
7. தவறுக்கு மறுசொல்.
11. நீதியற்ற மானின் நிலை இதுதான்.
13. அலகை இதற்கு ஒப்பிடப்படுகின்றது.
15. கட்டுவோர் விலக்கியது குலைந்துவிட்டது.
16. உறுதி வார்த்தை.
17. உதிர்ந்து போகக் கூடியது.

### மேலிருந்து கீழ்

1. ஆசிரியர் தன்னை இவ்வாறு அழைக்கின்றார்.
2. மனைவி பணிய வேண்டியவர்.
3. நல்ல மனச்சாட்சியுடன் கடவுளுக்குத் தரும் உறுதிப்பாடு.
4. கிறிஸ்துவிடம் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பண்பு.
5. இந்த மரமும் பேறு பெற்றதா?
8. நாம் குணமானதற்கான மருந்து
9. பல தீமைகளுக்கு ஆணி வேர்.
10. துன்பத்துக்கு ஒப்பிடப்படுவது தனித்து நிற்கின்றது.
12. ஆசிரியர் தன் மகனாகக் கருதியவர்.
13. சின்னப்பரின் மடலைக் கொண்டு வந்தவருக்கு முடிவு இல்லை.
14. நீரின் வாயிலாகக் காப்பாற்றப்பட்டவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி - 46

## முடிவுகள்

| இடமிருந்து வலம் | | மேலிருந்து கீழ் | |
|---|---|---|---|
| 1. | சாலே(ம்) | 1. | சாபம் |
| 2. | நம்பிக்கை | 2. | நகர் |
| 4. | பலி | 3. | கைள்க (கைகள்) |
| 5 | கடாக்கள் | 6. | பாலைவனம் |
| 6. | பார்வோன் | 8. | வார்த்தை |
| 7 | மலை | 9. | ஏசா |
| 11. | பார்வை | 10. | செம்மறி |
| 13. | சாசனம் | 11. | பாடுகள் |
| 15. | பீட(ம்) | 12. | வையகம் |
| | | 14. | சட்ட(ம்) |

## பரிசு பெறுவோர்:

1ம் பரிசு;

திமோதி ஆனந்தவாசன்
'அன்பு இல்லம்'
இருதயபுரம் மேற்கு,
மட்டக்களப்பு.

2ம் பரிசு:

செல்வி இ. சகாயமலர்
லூர்த்து அன்னை ஆலயம்,
பாலையூற்று,
திருகோணமலை.

பாராட்டுப் பெறுவோர் :

மாக்றேற் அந்தோனிப்பிள்ளை
கார்மேல் அருணோதயம்,
அக்கரைப்பற்று.

மாட்டீன் தெரேஸ் றீற்று
புனித இரட்சகர் ஆலயம்,
இரட்சகர் புரம்,
அக்கரைப்பற்று.

J. B. லொறற்று குருஸ்
167, டைக் வீதி,
திருகோணமலை.

ஜே. அருளப்பு
தமிழ் வித்தியாலயம்
அம்பாறை.

சந்தியா மைக்கல்
21/3, முனைத் தெரு,
மட்டக்களப்பு.

| | |
|---|---|
| பங்குபற்றியோர் | — 53 |
| சரியான விடை அளித்தோர் | — 32 |

அனைவருக்கும் எமது நன்றி!

**போட்டியாளர் கவனத்துக்கு!**


தொண்டனில் பிரசுரமாகும் விவிலியக்குறுக்கெழுத்துப்போட்டிக் கூப்பனில் நிரப்பி அனுப்பப்பட்டால் மட்டுமே போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படும். வேறு வகையில் வரைந்து அனுப்பப்படும் படிவங்கள் போட்டியில் சேர்க்கப்பட மாட்டாது என்பதை போட்டியாளருக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

— நிர்வாகம் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவருகிறது!



# இவர் யார்?

★ கிறிஸ்துவை அடக்கம் செய்த போது மூடிய துணியில் அவர் உருவம் அற்புதமாகப் பதிந்தது. அதனை ஆய்தரீதியாக விளக்குகிறது இந்நூல்.

★ கிறிஸ்துவின் திருப்பாடுகளை விளக்கும் பத்துப் (10) படங்கள்.

★ இதுவரை கிறிஸ்த்த தமிழ் உலகு கண்டிராத புதிய முயற்சி.

★ விலை ரூபாய் 30/-

கிடைக்குமிடங்கள்

1) அருள்திரு ஜூலியஸ் ஜே. இராசையா
புனித அந்தோனியார் ஆலயம்,
மூதூர்.

2) கத்தோலிக்க புத்தகசாலை

3) மறைக்கல்வி நடுநிலையங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA.



# காற்றில் கலந்து வரும்

## கத்தோலிக்க நிகழ்ச்சிகள்

நாள்:- 1 - 3 - 88
நேரம்: மாலை 6 - 45 மணி

சிறுவர் உலகம்

* பலன் கொடுப்போம் சித்திரம்

—★—

நாள்:- 6 - 3 - 88
நேரம்: மாலை 7 - 00 மணி

புதிய உலகம்

* அந்தநாள் வருமோ - சிறுகதை
* பார்த்ததும் - படித்ததும்
* திருத்தந்தையின் செய்தி

—★—

நாள்:- 12, 13, 14 - 3 - 88
நேரம்: காலை 5 - 50 மணி

நற்சிந்தனை

* வழங்குபவர் அருள்திரு சந்திரா அவர்கள்

—★—

நாள்: 15 - 3 - 88
நேரம்: மாலை 6 - 45 மணி

சிறுவர் உலகம்

* உதவிகள் சித்திரம்

நாள்: 20 - 3 - 88
நேரம்: மாலை 7 - 00 மணி

பாலர் சபைத் தினத்தை ஒட்டிய சிறப்பு நிகழ்ச்சி

* வழங்குவோர் மன்னார் மறை மாவட்டக் கலைஞர்கள்

—★—

நாள்: 26, 27, 28 - 3 - 88
நேரம்: காலை 5 - 50 மணி

நற்சிந்தனை

* வழங்குபவர்: அருள் சகோதரர் தேவா அவர்கள்

—★—

நாள்: 29 - 3 - 88
நேரம்: மாலை 6 - 45 மணி

சிறுவர் உலகம்

—★—

* புனிதவாரத்தை ஒட்டிய சிறப்பு நிகழ்ச்சிகள் இம்முறையும் வழமை போல் ஒலிபரப்பாகின்றன.

மலர்வேந்தன்

இச்சஞ்சிகை, மட்டக்களப்பு, புனித செபஸ்தியார் அச்சகத்தில் அச்சிட்டு தொண்டன் ஆசிரியர் குழுவினரால் 22 - 02 - 88ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org